Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 12 செவ்வாய்க்கிழமை (24-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 76

# இரு கடற்படைக் கப்பல்களை கடற் புலிகள் தாக்கி அழிப்பு!

## ஐம்பதுக்கு மேல் படையினர் பலி!! 2 யுத்த டாங்கிகளும் மூழ்கின!!!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 24

நேற்று முன்தினம் முன்னிரவு முதல் நேற்று அதிகாலை வரை பருத்தித்துறை, காங்கேசன்துறைக் கடல் பிரதேசங்களில் கடற்படையினரின் கப்பல் அணிக்கும் கடற்புலிகளுக்கும் இடையே நடந்த கடற் சமரில் இரு பாரிய கடற்படைக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டன; ஐம்பதுக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர்; கப்பலில் இருந்த 'ரி89' ரக டாங்கிகள் இரண்டும் கடலில் மூழ்கின.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து 'புலிகளின் குரல்' வெளியிட்ட தகவல்கள் வருமாறு:

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் திருமலையில் இருந்து 'பவ்வத்த' என்ற தரை இறக்கும் கப்பலும், வலம்புரி என்ற இராணுவ சரக்குக் கப்பலும், மற்றொரு போர்க்கப்பலும் துருப்புக்களையும், தளபாடங்களையும் ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறை துறைமுகம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 400 படையினருடன் வந்த 'சக்திய' கப்பல் தப்பியது!

யாழ்ப்பாணம், பெப். 24

நேற்று முன்தினம் இரவு தாக்குதலுக்கு இலக்கான கடற்படையின் தொடரணியில் 'சக்திய லங்காவ' என்ற பாரிய துருப்புக் காவி கப்பலும் இடம்பெற்றிருந்தது. அக்கப்பலில் இருநூற்றைம்பதுக்கும் நானூறுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையுடைய துருப்புகள் இருந்தனர். ஆனால் தாக்குதல் ஆரம்பித்ததும் அக்கப்பல் வேகமாகப் பயணித்து, பாதுகாப்பான காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் நுழைந்து விட்டது என செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

தாக்குதலுக்கு உள்ளான தரையிறங்கு கப்பலான 'பவ்வத்த' மற்றும் 'வலம்புரி' ஆகிய இரண்டிலும் விட 'சக்திய லங்காவ' கப்பல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல்கள் புறப்படுவது குறித்து புலிகளுக்கு தகவல் கிடைத்தது எப்படி?

### படை வட்டாரங்கள் அதிர்ச்சி

கொழும்பு, பெப். 24

கடற்படைக் கப்பல்களின் தொடரணி திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்குப் புறப்படுவது பற்றிய தகவல் விடுதலைப் புலிகளுக்கு எப்படிக் கிடைத்தது?

இந்தக் கேள்வி பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல்கள் புறப்படும் கால நேரத்தைத் துல்லியமாக அறிந்துதான் புலிகள் இத் தாக்குதலை நடத்தியிருப்பதாக கடற்படை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புலிகளுக்குத் தகவல் கிடைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு கப்பல்களிலும் இருந்த 108 படையினரில் 60 பேர் மீட்பு

யாழ்ப்பாணம், பெப் 24

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இரு கப்பல்களிலும் இருந்த 108 படையினரில் 60 பேர் மீட்கப்பட்டிருப்பதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கப்பல்கள் தாக்கப்பட்டதும் கடற்படை சுழியோடிகள் அப்பிரதேசத்தில் சுழியோடி 14 கடற்படையினர், 43 இராணுவத்தினர் உட்பட அறுபது பேரை மீட்டதாகவும்—

சிலர் நீந்திக் கரை சேர்ந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்டவர்களில் பலர் சிகிச்சைக்காக பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'பவ்வத்த' கப்பலின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கொமாண்டர் ரி. என். பி. பத்திரான, உதவி அதிகாரி இரண்டாவது லெப்டினன்ட் ஏ. எம். எச். ஆர். குமார ஆகியோ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'பவ்வத்த' 'வலம்புரி' இரண்டுமே அழிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 24

'பவள்' கவசவாகனம் போன்ற பெரிய வாகனங்களை ஏற்றிச் செல்லக் கூடிய பாரிய கடற்கலமான 'பவ்வத்த'வும் —

திருகோணமலையில் திருத்த வேலைகளை முடித்துக்கொண்டு முதல் தடவையாகச் சேவையில் ஈடுபட்ட சரக்குக் கப்பலான 'வலம்புரி'யுமே —

புலிகளின் தாக்குதலில் அழிந்து நீரில் மூழ்கின.

புலிகளின் தாக்குதலில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 11 கடற்கரும்புலிகள் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 24

நேற்று முன்தினம் முன்னிரவு முதல் நேற்று அதிகாலை வரை பருத்தித்துறை —காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்படையினருடன் நடந்த கடற்சமரில் பதினொரு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

அவர்களின் விவரம் வருமாறு:

★ லெப்டினன்ட் சேனைஹரன் (பாலசுந்தரம் கோபால கிருஷ்ணன் — மன்னம்பிட்டி, பொலனறுவை).

★ மேஜர் தமிழினியன் (நடராசா கிருபாகரன் — காங்கேசன்துறை).

★ மேஜர் சுலோஜன் (குமாரலிங்கம் விஜயந்திரன் — தம்பலகமம்).

★ மேஜர் குமரேஸ் அல்லது குமரேசன் (துரைராஜா செல்வக்குமார் — பூந்தோட்டம் வவுனியா).

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் நேற்று ஹர்த்தால்!

திருகோணமலை, பெப். 24

திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை இரவு ஈ. பி. டி. பி. அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் அத்தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மாணவனுக்கு அஞ்சலி செலுத்தியும் நேற்று திருகோணமலை பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்; நகரில் கடைகள் மூடப்பட்டு ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

உயிரிழந்த மாணவனுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை அதிர்ந்தது!

வடமராட்சி, பெப். 24

கடற்படைக் கப்பல்கள் மீது நேற்று முன்தினம் இரவு கடற்புலிகள் நடத்திய பெரும் தாக்குதலினால் எழுந்த குண்டு வெடிப்புகள் மற்றும் பீரங்கிச் சத்தங்கள் பருத்தித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலையில் சிவராத்திரி வழிபாடு வசதிகள், ஏற்பாடுகள் பூர்த்தி

### சொந்த வாகனத்திலும் செல்லலாம்

யாழ்ப்பாணம், பெப். 24

நாளை நடைபெறவுள்ள மகா சிவராத்திரியை ஒட்டி சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெறும் பூசைகளில் அடியார்கள் கலந்து கொள்ளவும் அங்குள்ள புனித தீர்த்தத்தில் நீராடவும் வேண்டிய ஒழுங்குகளும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இறுதி ஏற்பாடுகளை ஆராயும் பொருட்டு நேற்று மாலை 3

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சில பகுதிகளில் மட்டுமே நாளை ஊரடங்கு நீக்கம்?

யாழ்ப்பாணம், பெப். 24

மகா சிவராத்திரி தினத்தை ஒட்டி யாழ். குடாநாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுவதாக பலாலியில் உள்ள யாழ். படைகளின் இராணுவத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சங்கானை, நல்லூர் பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட 117, 118, 119 ஆம் இலக்கத்தை கொண்ட பகுதியில் மகா சிவராத்திரியையொட்டி 25-02-1998 அன்று மாத்திரம் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது" — என்று தமிழில் வெளியிடப்பட்ட அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தெளிவற்ற வசனத்தில் அமைந்திருந்த இச்செய்திக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சிவில் விமான நிலையம் ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் பெப். 24

''வடபகுதியில் சிவில் விமான நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும்''

இப்படியவி. வடக்கு பிரதேச சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சு. ஸ்ரீபாஸ்கரன் வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்லவை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டார்.

வடக்கில் சிவில் விமான நிலையம் அமைக்கப்படுவது தொடர்பாக ஆராயப்போவதாக பலகல்ல இச்சந்திப்பின் போது தெரிவித்தார்.

வலி. வடக்கில் மீளக்குடியமர்தல் பற்றி இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினார்கள்.

மக்களைப் பகுதி பகுதியாக மீளக்குடியேற விடுவதென்றும் இந்த ஆண்டுமுடியமுன் சகலரும் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பலகல்ல கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது ஸ்ரீ பாஸ்கரன் எழுப்பிய பிரச்சினைகளுக்கு பதிலளித்த போது மேஜர் ஜெனரல் தெரிவித்ததாவது:-

★ காப்பரண்கள் அகற்றப்பட்டு வருகின்றன. வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் ஏனைய போக்குவரத்துக்கும் தேவையான இடங்களில் காப்பரண்கள் திறந்து விடப்படும்.

★ கடற்படையின் அனுமதியுடன் சேந்தான்குளத்திற்கு மேற்கே மாதகல் வரை மீன் பிடிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான நேரம் குறுகியதாக இருப்பதால் நேரத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

★ மின் விநியோகத்துக்கென இரண்டு இயந்திரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவை இங்கு வந்ததும் மின்சாரம் வழங்கப்படும். ஆனால் யாழ். குடாநாடு முழுவதும் மின் விநியோகிக்க வேறு மூன்று இயந்திரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. மின்சாரம் வரும்போது வீதி விளக்குகளும் பொருத்தப்படும்.

★ ஒடு, அஸ்பெஸ்ரஸ் சீற், சீமெந்து ஆகியவற்றைப் பெற்று விண்ணப்பித்தவர்களின் அடிப்படையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ தத்தமது வீடுகளையும், கோயில்களையும், தேவாலயங்களையும் பார்வையிட ஒரே நேரத்தில் சகலரையும் பாதுகாப்புப் பகுதிக்குள் செல்ல விடுவது ஆபத்தானதால் அவ்வப்பகுதி கிராம அலுவலர் சென்று பார்வையிட்டு உரியவர்களுக்குத் தகவல்களைக் கொடுக்கலாம். பூசகரும், மதகுருமாரும் அனுமதியுடன் தத்தம் கோயில்களையும் தேவாலயங்களையும் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

★ நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானம் புல்டோசரால் உழுது செப்பனிடப்படும்.

★ விமான நிலையவிஸ்தரிப்புக்கு நட்ட ஈட்டை உடனடியாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒருபகுதி நிலத்தை எக்காலத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது.

★ கால்நடைகள் குறிப்பாக நல்லின பசு மாடுகளும், ஆடுகளும் யாழ். மக்களுக்கு கப்பல் மூலம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

★ கோப்பாய், கைதடிப் பாதையைத் திறந்து விடுவதில் அதிகம் கஷ்டம் இராது. அதனை ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

## அறிவித்தல்

### அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பிரதேச செயலரிடம் இருந்து தறிப்பதற்கு அனுமதி பெற்ற மரங்கள்/ விறகுகள் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்குரிய அனுமதிப்பத்திரம் எம்மால் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
இல. 69, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி/2953)

## பெண் காயம்

ஓடிக்கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து விழுந்து குடும்பப்பெண் ஒருவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி, கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அருளப்பு சாந்தி (வயது 32) என்பவரே காலில் காயமடைந்தவராவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

**CASIO Institute**
கல்வியங்காடு
**Spoken English**
by:
**BRITTO**
ஆரம்பம்: 02 - 03 - 98
திங்கள் 4 மணி
- இயக்குநர்
(53615)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
திங்கள் முதல்
அர்ஜுன் - சிம்ரான்
நடித்த
கொண்டாட்டம்
காட்சிகள்:- 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)

லிபேட்டி சினிமா
அச்சுவேலி
35 அடி
அகலத் திரையில்
இன்று மட்டும்
சரத்குமார் - ஹீரா
நடித்த
பாண்ட் மாஸ்ரர்
குடும்பச் சித்திரம்
பழைய நேரம்
1-30 - 3-30
(53069)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி தர்மலிங்கம் கனகேஸ்வரி

மலர்வு: 05-04-1939 உதிர்வு 16-02-1996

திதி: 24-02-1998

ஆண்டிரண்டு சென்றாலும் ஆறவில்லை எம் இதயம்
சண்டு உமது நினைவுதான் எமை வாட்டி வதைக்குதே!

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன்
பிள்ளைகள், மருமகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்

''அன்பில்''
20/1, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(53616)

வளைகுடா நெருக்கடி

# இலங்கையர் குவைத் செல்வது நிறுத்தம்

கொழும்பு, பெப். 24

குவைத்துக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களின் பயணத்தை இடைநிறுத்துவதென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது. குவைத் நாட்டின் தற்போதைய நிலைமையில் மாற்றம் ஏற்படுவதைப் பொறுத்து இவர்கள் தமது பிரயாண ஏற்பாடுகளைச் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று பணியகம் அறிவித்துள்ளது.

வளைகுடாவில் சூழ்ந்துள்ள போர் மேகம் காரணமாக ஈராக் எந்நேரமும் குவைத் மீது தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் குவைத்தில் பதற்றம் நிலவுகிறது; அங்குள்ள வெளிநாட்டவர்கள் பீதியால் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். (ஐ-9)

# தெற்கில் சம்பளப்பணம் கொள்ளை

கொழும்பு, பெப். 24

கெஸ்பாவ பிரதேச சபை ஊழியர்களுக்கு வழங்குவதற்கென வங்கி ஒன்றில் இருந்து

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா சிற்சபேசன்

(அம்பி, கிரியோன் உணவகம், சாவகச்சேரி)

சாவகச்சேரி கோவிற் குடியிருப்பைச் சேர்ந்த நடராசா சிற்சபேசன் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா நாகேஸ்வரி (தங்காள்) ஆகியோரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் (முன்னாள் விதானை), அன்னப்பிள்ளை அவர்களின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், நீலாம்பரியின் (சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி) அன்புத் தந்தையும், மனோறஜனி, சவுந்தரராஜனி, நடனசபேசன் (ஜேர்மனி), சுகந்தினி (ஜேர்மனி), ஞானசபேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசநாயகம் (கிரியோன் கூல்பார்), வைகுந்தவதி, பத்மநாதன், வதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-02-98 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம. இராசநாயகம்
(சகோதரி)
இரியோன் கூல்பார்

செருக்கன் பிள்ளையார் வீதி,
டச்சு வீதி,
சாவகச்சேரி.

(53600)

### அன்ரனி றேமன் சந்தியாப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அன்ரனி றேமன் சந்தியாப்பிள்ளை 23-02-98 அன்று காலமானார்.

அன்னார் திருமதி ச. பூமணியின் அன்புக் கணவரும், ச. ஜெகானந்தன் (ஆசிரியர், யா/ நவாலி ம. வி.), ச. ஜெயகாந்தன் (''பாட்டா'' நிறுவனம், கொழும்பு), திருமதி ஜெயவதனி யோகசகாயம் (ஆசிரியை, கொ/ முகத்துவாரம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேபி, றுக்மணி, விக்ரறீன், டொனால்ட் யோகசகாயம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மாநகரசபை, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், கார்த்திகா, டிலான், நிஷான், ஆன் இன்ரா, வினோத், கிசோத், துஷித் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 24-02-98 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. ஜெயானந்தன்
(மகன்)

ஜெயவசந்தம்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(53618)

### ஆன்கிறேஸ் யூப்பிறேசியா புஷ்பம்

கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆன் கிறேஸ் யூப்பிறேசியா புஷ்பம் லோறன்ஸ் 23-2-98 இல் காலமானார்.

இவர் ப. லோறன்ஸ் (அரியம் ப.நோ.கூ சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், டிலானி (பழைய மாணவி, யா/திருக்குடும்பகன்னியர்மடம்), சிறானி (A/L மாணவி கண்டிக்குளி மகளிர் கல்லூரி), அரவிந்தன் (A/L மாணவன், சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ப. அருளானந்தம் (ஆசிரியை யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்), செல்வராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அகஸ்ரின் முத்தம்மாவின் மகளுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 24-2-98 செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு (புதியநேரம்) கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
ப. லோறன்ஸ்
(அரியம்)
(கணவன்)

21, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(53601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வளைகுடா பிரச்சினை குறித்து
# ஐ. நா. - ஈராக் உடன்பாடு
## அனானின் பாக்தாத் விஜயத்தில் புதிய திருப்பம்

பாக்தாத், பெப். 24

வளைகுடா நெருக்கடிக்கு தீர்வு காணும் இறுதி முயற்சியாக ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனானும் ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னும் நடத்திய பேச்சுவார்த்தைகள் நல்ல திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட உடன்பாட்டுக்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்தானதும்.

ஈராக்குக்கும், ஐ. நாவுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் இந்த உடன்பாடு இரு தரப்புக்கும் இடையில் மட்டுமல்லாது உலக முழுமைக்கும் சாதகமான நிலையை தோற்றுவித்துள்ளது என ஐ. நா பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட சாதகமான தீர்வு குறித்த விபரங்களை தாங்கள் வெளியிடாது வைத்திருப்பதாகவும் இது குறித்து தாம் மகிழ்ச்சி கொண்டுள்ளதாகவும் கோபி அனான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாலும் இதர உறுப்பு நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் உடன்படிக்கை குறித்து எந்த விளக்கமும் கிடைக்கவில்லை என்றும்—

ஏனெனில் உடன்படிக்கை விபரம் முதலில் ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு அவிக்கப்பட வேண்டும் என்றும் -

ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம் இன்று நியூயோர்க்கில் நடைபெற உள்ளது

# வழக்குகளை தாமதப்படுத்துவதாக ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு

சென்னை, பெப். 24

"தனக்கு எதிராக உள்ள ஊழல் வழக்குகளின் விசாரணையைத் தாமதப்படுத்தும் நோக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவ்வப்போது ஏதாவது ஒரு மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்"

சென்னையில் சிறப்பு நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் பி. வெங்கடசுப்பிரமணியன் தாக்கல் செய்த மனுவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி இறக்குமதி செய்ததில் நடந்த ஊழல் தொடர்பான வழக்கு விசாரணையை ஒத்தி வைக்கவேண்டும் என்று கோரி சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனுத் தாக்கல் செய்திருந்தார் அவ்வழக்குத் தொடர்பான சில ஆவணங்களைத் தரவேண்டும் என்று கோரியும் ஒரு மனுவை அவர் தாக்கல் செய்திருந்தார்.

இதற்குப் பதில் அளித்த அரசு வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்தும் நோக்கில் இது போன்ற மனுக்களை ஜெயலலிதா தாக்கல் செய்கிறார்.

பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் தொடர்பான வழக்குகளை விரைவாக முடிக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

இத்தகைய வழக்குகளை 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. எனவே ஜெயலலிதாவின் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இப்படி தனது பதில் மனுவில் அரச வழக்கறிஞர் கூறியுள்ளார். (இ-10)

# வெடிகுண்டு கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வேண்டும்
## அத்வானியிடம் ரஜனிகாந்த் கோரிக்கை

புதுடில்லி பெப். 24

தமிழகத்திலும் பிற பகுதிகளிலும் பரவி வரும் வெடிகுண்டு கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று பாரதீய ஜனதா தலைவர் அத்வானிக்கு நடிகர் ரஜனிகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

குஜராத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த அத்வானியுடன் ரஜனிகாந்த் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போதே இதை அவர் வலியுறுத்தினார் என்று பாரதீய ஜனதாக் கட்சி டில்லியில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமது உரையாடலின் போது கோவை குண்டு வெடிப்புகளில் அத்வானி உயிர் தப்பியது குறித்து ரஜனி நிம்மதி தெரிவித்தார். அதற்காக கடவுளுக்கு நன்றி கூறுவதாகவும் அவர் கூறினார்.

தமிழகம் போன்ற அமைதிப் பிரதேசத்தில் வெடிகுண்டு கலாசாரம் பரவி வருவது குறித்து அவர் கவலை தெரிவித்தார். மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால் தமிழகத்திலும், பிறபகுதிகளிலும் பரவி வரும் வெடிகுண்டு கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அத்வானியிடம் அவர் கேட்டுக் கொண்டார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேசமயம் தி. மு. க. — தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணிக்கு நேரடியாக ஆதரவு தெரிவித்துள்ள போதிலும், தமிழகத்தில் வெடிகுண்டு கலாசாரம் பரவி வருவதாகவும், அதை பாரதீய ஜனதா ஆட்சி முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் மூலமும் தி.மு.க. அரசு மீதான தனது அதிருப்தியை ரஜனிகாந்த் வெளிப்படுத்தியுள்ளதாக பாரதீய ஜனதா தலைவர்கள் இதற்கு விளக்கம் அளிக்கின்றனர். (இ-10)

## உலக அரங்கில்

என்றும் ஐ. நா பேச்சாளர் தெரிவித்தார்.

ஐ. நாவுக்கும், ஈராக்குக்கும் இடையான இந்த உடன்பாடு ஐ. நா பொதுச் செயலர் கோபி அனானின் தனிப் பெரும் சாதனை என வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்பாடு ஒரு வெற்றிச் செயற்பாடு என்றும்— இதன்மூலம் கோபி அனான் தனித்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார். என்றும் பக்தாத்தை மையமாகக் கொண்டு செயற்படும். ஒரு மேற்கு நாட்டு ராஜதந்திரி தெரிவித்துள்ளார். (இ-8)

# இதுவரை 3,000 குண்டுகள் கோவைப் பகுதியில் மீட்பு

கோவை, பெப். 24

கோவை நகரில் கடந்த ஒரு வாரகாலமாக பொலிஸார் நடத்திய சோதனைகளில் பல்வேறு வகையான சுமார் 3 ஆயிரம் வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

திருமால் வீதியில் அதிக எண்ணிக்கையில் அண்டாக்களிலும், குண்டாக்களிலும் வெடிகுண்டுகளை பதுக்கியிருந்த பெட்டிக்கடை உரிமையாளர் ஒருவரை கோவை நகர பொலிஸார் தேடிவருகின்றனர்.

கோவை நகரில் கடந்த ஒரு வார காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் சுமார் 550 குழாய்க் குண்டுகள், 200 ஜெலட்டின் குச்சிகள், 1,200 டிட்டனேட்டர்கள், 1,000 பெற்றோல் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

திருமால் வீதியில் பொலிஸார் நடத்திய முதலாவது அதிரடிச் சோதனையின் போது 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் தடை செய்யப்பட்ட அல்உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். [இ-10]

# ஜி-7 அமைப்பு ஜி-8 ஆகியது

மொஸ்கோ, பெப். 24

ரஷ்யா "ஜி - 7" நாடுகளுடன் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டது.

இதுவரை ஜி" - 7 " என வழங்கப்பட்டு வந்த இந்த அமைப்பு இனி " ஜி - 8 " என வழங்கப்படும். (இ-8)

# தேர்தல் வன்முறைகள் இந்தியாவில் 9பேர் பலி

புதுடில்லி, பெப். 24

இந்தியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆம் கட்ட வாக்குப்பதிவின் போது பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வன்முறைச் சம்பவங்களினால் பீஹார் மாநிலத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

ஆந்திரா மாநிலத்தில் "மக்கள் யுத்தக்குழு" என்ற அமைப்பு இயக்கிய வெடிகுண்டுக்கு 6 பேர் பலியாகியுள்ளனர். (இ-8)

# ரொக்கட் தாக்குதல்

பேரூட், பெப் 24

தென் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது இரு இஸ்ரேல் விமானங்கள் ரொக்கட் தாக்குதல் நடத்தியுள்ளன. (இ)

# ஆப்கனில் மீண்டும் பூகம்பம்

காபூல், பெப். 24

ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

சேத விபரம் குறித்து தகவல் எதுவும்இல்லை. (இ)

# யூரியா உரத்தின் தரம் குறித்து உதவி ஆணையாளர்விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 24

கமநல சேந்திர நிலையங்களில் விற்பனை செய்யப்படும் யூரியா உரம் தரம் வாய்ந்தது என்பதை தெளிவுபடுத்தியாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கமநல கேந்திர நிலையங்களில் விற்பனை செய்யப்படும் யூரியா உரம் தரம் குறைந்தது என விவசாயிகள் மத்தியில் ஒரு குழப்ப நிலை உருவாகி வருவதாகப் பெரும்பாக உத்தியோகத்தர்கள் எனது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

எமது கமநல கேந்திர நிலையங்களில் விற்பனை செய்யப்படும் யூரியா உரமானது ஸ்ரீலங்கா பசளைக் கம்பனியால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டதாகும்.

இலவசக் கப்பல் கட்டணத்துடன் மாவட்டத்துக்கு தருவிக்கப்பட்ட காரணத்தினாலேயே கமநல கேந்திர நிலையங்களில் யூரியா குறைந்த விலையில் விற்கப்படுகின்றதே தவிர, தரம் குறைந்த காரணத்தால் விற்பனை செய்யப்படவில்லை என்பதையும் இவ்விடத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்

எமது கமநல கேந்திர நிலையங்களில் விற்பனை செய்யப்படும் யூரியா உரத்தில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் எவராவது பரிசோதனை மேற்கொள்ள விரும்பினால் அவர்களைப் பரிசோதனை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு சகல கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும் என்னால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

இப்படித்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பண்ணிசைப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம்

கல்வித்திணைக் களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற

## புலிகளால் மரணதண்டனை

மட்டக்களப்பு ஈச்சந்தீவு சந்தியில் 24 வயது இளைஞர் ஒருவருக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

சனிக்கிழமை மாலை பொது மக்கள் முன்னிலையில் இத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மகிழவட்டுவான் வாசியான தாமோதரம் பகிரதன் என்பவரே கொல்லப்பட்ட இளைஞர் ஆவார்.

3 மாதங்களாக விடுதலைப் புலிகளால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் மீது உளவு, படையினருக்கு [illegible] 6 [illegible] சுமத்தப்பட்டிருந்தன. (இ-21)

சைவ சமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்

பண்ணிசைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரம் வருமாறு —

### கீழ்ப்பிரிவு ஆண்கள்

1 — துரைசிங்கம் கேசவன், — சாவகச்சேரி 2 — சத்தியமூர்த்தி லக்மன், — மகாஜனாக் கல்லூரி. 3 — கிரேசபிள்ளை தர்ஸனன், — யாழ். இந்துக்கல்லூரி.

### பெண்கள்

1 — சைந்தவி பரமேஸ்வரன், — சவாகச்சேரிஇந்துக் கல்லூரி. 2 — டஷிகா தேவராஜா, — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. 3 — தாரணி ஸ்ரீபாலச் சந்திரன், — யாழ். இந்துமகளிர் கல்லூரி..

### மேற்பிரிவு ஆண்கள்

1 — நவரத்தினம் பரந்தாமன் — யாழ் இந்துக்கல்லூரி. 2 — ரஞ்சன் கஜானனன், — யாழ் இந்துக்கல்லூரி. 3 — பாலகுமார் தயாபரன் — மானிப்பாய் இ. க.

### பெண்கள்

1 — தாரணி ரஞ்சன், — வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2 — வேணி குணராஜசிங்கம், — வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 3 — தனசொரூபி நவரெத்தினம், — கொக்குவில் இந்துக்கல்லூரி.

### அதிமேற்பிரிவு பெண்கள்

1 — தர்ஷினிகேதீஸ்வரன், — மகாஜனாக்கல்லூரி.
2 — பிரியந்தி தில்லையம்பலம், — கொக்குவில் இ. க.
3 — சிவரஞ்சினி சிவசண்முகமூர்த்தி, — விக்ரோறியாக் கல்லூரி. (இ-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி இன்றி வெளிநாடு சென்ற 514 ஆசிரியருக்கு வேலை இல்லை

கொழும்பு, பெப். 24

அரசாங்கத்தின் உரிய முன் அனுமதி இன்றி வெளிநாடு சென்று திரும்பிய 514 ஆசிரியர்களுக்கு மீண்டும் ஆசிரியர்பதவி வழங்கப்படமாட்டாது.

மீண்டும் வேலை வழங்கக் கோரி இவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்று அங்கு பணியாற்றிவிட்டு இங்கு திரும்பிய இந்த 514 ஆசிரியர்கள் சுமார் இரண்டில் இருந்து 5 ஆண்டுகள் வரை அவர்களது ஆசிரியர் தொழிலைக் கைவிட்டிருந்தனர் என கல்வி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுவாக ஆசிரியர் சேவையில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதாலும் புதிதாக ஆசிரியர்களை நியமிக்க மாகாண சபைகள் நடவடிக்கை எடுத்துவருவதாலும் இந்த 514 ஆசிரியர்களையும் மீண்டும் சேவையில் இணைக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆசிரிய சேவையில் சுமார் 25 ஆயிரம் பேர் மேலதிகமாக உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

# ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டில் உள்ள விவசாயிகள் இலகுவாக மண்ணெண்ணெய் பெற வசதியாக ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க புதிய நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

இதுவரை காலமும் விவசாயிகளுக்கு எரிபொருள் முகவர்கள் மூலமாகவே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இதனால் விவசாயிகள் கூடுதல் தூரம் சென்று தமது கூடுதல் நேரத்தை செலவிட்டு மண்ணெண்ணெயை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை இருந்து வந்தது.

இப்புதிய நடைமுறைப்படி விவசாயிகள் தமது இருப்பிடத்துக்கு அருகில் உள்ள ப. நோ. கூ. சங்க கிளையில் மண்ணெண்ணெயை கொள்வனவு செய்ய வசதி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

[இ-3]

# இளைஞரை சோதிக்கும் போது படையினர் புதிய நடைமுறை

திருகோணமலை, பெப். 24

திருகோணமலையில் படையினர் புதுவகையான சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுற்றிவளைப்புக்களின் போது இளம் வயதினரைக் கைது செய்து முகாமுக்கு கூட்டிச் சென்று விசாரணை செய்யும் முறைக்குப்பதிலாக —

இளம் வயதினரின் அடையாள அட்டை இலக்கம், பெயர், விலாசம் மற்றும் விபரங்களை கைது செய்யும் இடத்தில் வைத்து பெற்றுக் கொண்டு விடுவிக்கின்றனர் படையினர்.

பின்பு ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டவுடன் குறிப்பிட்ட பகுதியை சுற்றிவளைத்து தம்மிடம் உள்ள விவரங்களை தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

[இ-3]

# கிளிநொச்சியில் சிப்பாய் பலி

வவுனியா, பெப். 24

கிளிநொச்சி யுத்த முனையில் கடந்த சனியன்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 4 படையினர் காயமடைந்தனர்.

படையினரின் பதில் தாக்குதலால் இரு விடுதலைப்புலிகள் பலியானார்கள் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

# சங்கக் கடையில் திருட்டு

உரும்பிராய், பெப் 24

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய் வடக்கு 25 ஆம் கிளையின் கூரை ஓடுகளை அகற்றி இரவில் உட்புகுந்த திருடர்கள் பல பெறுமதியிக்க பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

காவலாளி கடமையில் இருந்த நேரத்தில் —

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது — இத் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளது.

திருடர்கள் கட்டடத்தின் பின்பக்கத்தால் நுழைந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

கோப்பாய் பொலீஸார் புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். காவலாளி அவர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-154)

# தேசிய கல்விக் கல்லூரிகளாக கல்விக் கல்லூரிகள் தரம் உயர்வு

வவுனியா, பெப். 24

நாட்டில் உள்ள ஒன்பது கல்விக் கல்லூரிகளும் தேசிய கல்விக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

கல்விக் கல்லூரிகளில் மாணவர்கள் அனுமதி பெறுவது அதிகரித்துள்ளதால் கல்லூரிகளின் தரத்தை உயர்த்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு, வவுனியா கல்விக் கல்லூரிகள் உட்பட 9 கல்விக் கல்லூரிகளும் கல்வி, உயர்கல்வி அமைச்சால் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

அதேநேரம் —

யாழ்ப்பாணம் உட்பட ஐந்து இடங்களில் புதிய கல்விக் கல்லூரிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ 3)

# மின் விநியோகப் பணிகள் மின்சார சபையின் பொறுப்பில்

யாழ்ப்பாணம், பெப். 24

உள்ளூராட்சி அமைப்புக்களின் கீழ் உள்ள மின் விநியோகப் பணிகளை இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்று வருகிறது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகரசபை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி நகரசபைகள் ஆகியவற்றின் கீழ் இருந்த மின்சார விநியோகத்தை மின்சார சபை பொறுப்பேற்றுள்ளது.

அத்துடன் சில பிரதேச சபைகளிடம் இருந்தும் இப்பொறுப்பை மின்சார சபை ஏற்றுள்ளது.

அந்த சபைகளின் மின்சார விநியோகப் பிரிவில் பணிபுரியும் ஊழியர்களின் சேவையும் மின்சார சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ-3)

# பரிசளிப்பும் திருமுறை விழாவும்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் அறநெறிப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் திருமுறை விழாவும் எதிர்வரும் மார்ச் 1 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

திருமுறை விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரியார், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், சிவசண்முகவடிவேல், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன், நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி நா. ஞானகுமாரன், திருமதி நாச்சியார் செல்வநாயகம், இசைப் பேராசிரியர் சந்திரசேகரம், மு. நவரத்தினம், மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், சிவ. மகாலிங்கம், இந்து சமயப் பேரவை உபதலைவர் ஆ. மகாலிங்கம் சக்திகிரிவன், அருட்கவி சி. விநாசித்தம்பி ஆகியோர் உரையாற்றுவார்கள்.

[இ-103]

# தென்னைகளுக்கு தண்டு அழுகல் நோய்

நல்லூர்பெப். 24

குடாநாட்டில் தென்னை மரங்களில் தண்டு அழுகல் நோய் பரவியுள்ளது.

''ஸ்ரெம்லெக்டிங்'' என்ற இந்நோயை கட்டுப்படுத்த தென்னை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நோய் காணுமிடத்து தென்னை உற்பத்தியாளர்கள் நல்லூர் சமநலச் சேவை நிலையத்திலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்தியேந்திராவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(இ-103)

# வேலையற்ற இளைஞருக்கு திருமலையில் தொழிற் பயிற்சி

திருகோணமலை, பெப். 24

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை கனேடிய சர்வதேச பல்கலைக்கழகம் இவ்வாண்டு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இந்தத் தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் மூதூர்ப் பகுதியில் இருசக்கர உழவு இயந்திரத்தை இயக்குவது தொடர்பான பயிற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி திட்டத்தின் திருமலை மாவட்டப் பணிப்பாளர் ஏ. சிவலோகநாதன் தெரிவித்தார்.

(இ-3)

# இலக்கத் தகடு

சுதுமலை, பெப். 24

மானிப்பாய் பட்டினசபை, ஆனைக்கோட்டை கிராம சபை பகுதியில் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

10 ரூபாய் கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் இலக்கத் தகட்டினையும் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ-139)


## ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு பேன், சொடுகு வராது தடுப்பதற்கு, கேசம் பட்டுப் போல் மிளிர்வதற்கு கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கு, கேசத்தை குளிர்ச்சி யூட்டுவதற்கு தேவையான மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்ந்து தயாரிக்கப்பட்டது.

சித்த வைத்திய கலாநிதி அவர்கள் வழங்கிய ஆலோசனையின் படி தயாரிக்கப் பெற்றது.

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் கேட்டு வாங்கிப் பயன் பெறுங்கள்.

தயாரிப்பாளர்:-

ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ்

ஆசிரமம் அருகில், கைதடி.

(53604)

## அறிவித்தல்

மலிவு விலையில்

ஆப்ர சேவ் பேறம் விற்பனையாகின்றன.

நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:

தாசன் சிகை அலங்கரிப்புக் கலையகம்

இல. 12, சேர். பொன். இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி,

[53603]

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய கட்டட நிதிக்காக மாபெரும் கலை நிகழ்ச்சிகள்

இடம்:- சங்குவேலி தெற்கு மானிப்பாய்

காலம்:- 25 — 02 — 98 (புதன்கிழமை)

நேரம்:- இரவு 7மணி

மகா சிவன் ராத்திரியை முன்னிட்டு மாபெரும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற இருப்பதால் அனைத்து அம்பாள் அடியார்களையும் வருக, வருக என வரவேற்கின்றனர் ஆலய அடியவர் சங்கத்தினர்.

ஆலய அடியவர் சங்கம்

(49967)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா சின்னத்துரை

(நீர்வேலி வடக்கு, கொட்டைக்காடு)

அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (24-2-97) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள்.

நீர்வேலி வடக்கு, இராச வீதி, நீர்வேலி.

(53606)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பேசாலை அகதி முகாமில்

# யாழ். மற்றும் பகுதிகளுக்கு செல்ல 10 ஆயிரம் பேர் தவம் கிடப்பு

மன்னார், பெப். 24

யாழ்ப்பாணம் மற்றும் மாவட்டங்கிக்கும் செல்லவென இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இருந்து வந்த சுமார் 10 ஆயிரம் பேர் உணவு, குடிதண்ணீர் மற்றும் போதிய அடிப்படை வசதிகள் இன்றி மன்னார் பேசாலை அகதி முகாமில் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளார்கள் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக கப்பல் சேவை இடம்பெறாமையினாலேயே இவர்கள்பேசாலை முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் 5ஆயிரம் பேர் வரையில் யாழ்ப்பாணம் வருவதற்காகவே காத்துநிற்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையானோர் நோய்வாய்ப்பட்டும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் உள்ளாகிய நிலையிலும் தமது கையிருப்பில் இருந்த பணம் முழுவதையும் செலவழித்த நிலையிலும் இவர்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது

அத்தோடு இவர்களை முகாமை விட்டு வெளியே செல்ல படையினர் அனுமதி வழங்குவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காத்து நிற்பவர்களில் சுமார் 125 பேர் வரையில் கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-10)

# தந்தை செல்வாவின் நினைவாக முத்திரை

## புளொட் அமைப்பு கோரிக்கை

வவுனியா, பெப் 24

தந்தை செல்வாவின் நூற்றாண்டு நினைவாக முத்திரை வெளியிட வேண்டும் என்று புளொட் அமைப்பின் உப-தலைவர் என். மாணிக்கதாசன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள பகிரங்க செய்தியில் கேட்டுள்ளார்.

தமிழ்மக்களின் விடிவுக்காக தன்னையே அர்ப்பணித்த தந்தை செல்வாவை நினைவு கூரும் வகையில் இந்த முத்திரை வெளியிடப்பட வேண்டும் என்று அவர் தனது செய்தியில் கேட்டுள்ளார்.

தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவை யொட்டி புளொட் அமைப்பு பல திட்டங்களை செயற்படுத்தவிருக்கிறது.

(இ-3)

# மகளுக்கு இளநீர் கொடுக்க மரத்தில் ஏறியவர் விழுந்து பலி!

தென்மராட்சி, பெப். 24

காய்ச்சலால் வேதனையுறும் மகளுக்கு கொடுப்பதற்காக இளநீர் பிடுங்க மரத்தில் ஏறிய தந்தை மரத்திலிருந்து தவறி விழுந்து மரணமான சம்பவம் மீசாலை அல்லாரை வடக்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கதிரவேலு (வயது 60) என்னும் ஆறுபிள்ளைகளின் தந்தையே மரணமானவர் ஆவார்

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

கிராம அலுவலர் வே. வேலாயுதபிள்ளை காட்சிகளை நெறிப்படுத்தினார்.

(இ-117)

# இரு வர்த்தகர்கள் வவுனியாவில் கைது!

வவுனியா நகரில் சனிக்கிழமை மாலை இரு தமிழ் வர்த்தகர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபடும் இவ்விரு வர்த்தகர்களின் கடைகளில் சந்தேகத்துக்குரிய பார்சல்கள் இருப்பதாகத் தெரிவித்தே மார்க்கண்டு மயில்வாகனம், என். நடராசா ஆகிய இரு வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது கைது குறித்து வவுனியா செஞ்சிலுவை சங்கத் தலைவர் சிவநாதன் கிஷோர் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது இருவரும் இராணுவ புலனாய்வு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது

(இ-164-3)

# பருத்தித்துறையிலிருந்து பளைக்கு வான் சேவை

வடமராட்சி, பெப். 24

பருத்தித்துறையிலிருந்து பளைக்கு தட்டிவான் சேவை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலை 7 30 மணிக்கு புறப்படும் தட்டிவான் நெல்லியடி கொடிகாமம் ஊடாக பளையைச் சென்றடையும்.

அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை நோக்கி திரும்பும்.

வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம் இச் சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

(இ-173)

# சிறிமாவோ விரைவில் பதவி விலகுவார்

கொழும்பு, பெப். 24

பிரதமர் பதவியில் இருந்து சிறிமாவோ பண்டாரநாயக்க விரைவில் விலகுவார் என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் பதவியை அனுருத்த ரத்வத்த பிடிக்காமல் இருப்பதற்காகவே தாம் பதவி விலகுவதை இவ்வளவு காலமும் தாமதப்படுத்துவதாக அவர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரிடம் கூறியதாக மேலும் அந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

எனினும் முதுமை காரணமாக சிறிமாவோ தனது நிலைப்பாட்டை சற்று தளர்த்தி விரைவில் பதவி துறக்க இருப்பதாக கூறப்படுகிறது.

(இ-3)

# இல்ல மெய்வன்மை போட்டி

மானிப்பாய், பெப். 24

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வீ. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இலங்கை வங்கி பிரதம முகாமையாளர் வீ. தில்லைநாதன் கலந்து கொள்வார்.

(இ-90)

# மீன் விலை வீழ்ச்சி

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்குப் பகுதியில் காவநிலை சீரடைந்ததைத் தொடர்ந்து கடற்றொழில் நடைபெறுகிறது.

இதனால் தற்போது இப்பகுதியில் மீனின் விலை வெகுவாக வீழ்ச்சி அடைந்து வருகிறது.

(இ-36)

# எல்லை பிரச்சினை: இருவர் காயம்

நெல்லியடி பெப். 24

வேலி எல்லைப் பிரச்சினை கைகலப்பில் முடிந்தது.

இருவர் பலத்த காயங்களுடன் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் புலோலி வல்லை சாலையடியில் இடம் பெற்றது.

# மீள ஆரம்பிக்கும் முயற்சி கைகூடவில்லை

செம்பியன்பற்று பெப். 24

உடுத்துறை மகாவித்தியாலயத்தை மீளவும் இயக்குவதற்கு உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் எடுத்த முயற்சி கைகூடவில்லை.

உடுத்துறை மகாவித்தியாலயம் அமைந்துள்ள பகுதியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் பாடசாலையை மீளவும் இயக்குவது சாத்தியப்படாது என தெரிய வருகிறது.

உடுத்துறை கிராம சேவகர் பிரிவில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டால் உடுத்துறை மகாவித்தியாலயம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கும் அதுவரைக்கும் மருதங்கேணி இந்து வித்தியாலத்தின் ஒரு பகுதியில் தற்காலிகமாக இயங்கும் என தெரிய வருகிறது.

(இ-36)

# பிரவசவிடுதியை முழு அளவில் இயங்க வைக்க முயற்சி

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தக பிரசவ விடுதியை மீளவும் இயக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

அம்பன் மத்திய மருந்தகம் மதியம் 12மணியுடன் செயல் இழப்பதால் அம்பன் மத்திய மருந்தக பிரசவ விடுதியும் மதியம் 12 மணியுடன் செயல் இழக்கிறது.

இதனால் கர்ப்பிணித் தாய்மார் உட்பட பலரும் மருத்துவ வசதிகளை பெறுவதற்கு வழி இன்றித் தவிக்கின்றனர்.

(இ-36)

### ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை:

# மாவட்ட நிலைகளில் ஏற்பட்ட தவறுகள் திருத்தப்படுகின்றன

கடந்த வாரம் வெளியான ஜி சீ ஈ (உயர் தர) பரீட்சை முடிவுகளில் மாவட்ட நிலைகளில் ஏற்பட்டுள்ள தவறுகள் திருத்தப்பட்டு சரியான முடிவுகள் ஓரிரு நாள்களில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நிலையில் ஏற்பட்ட தவறுகள் திருத்தப்பட்டு பட்டியல் அனுப்பப்படவிருப்பதாகவும் —

தேசிய மட்ட நிலையில் மாற்றம் இருக்காது என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்

[இ-3]

# விவசாயிகளின் பிரச்சினை

நாவற்குழி மேற்குப் பகுதியில் செம்பாடு, பெரியாங்காடு ஆகிய இரு பகுதிகளில் விவசாயத்தையே முழுநேரத் தொழிலாகக் கொண்டு வாழும் ஏழை விவசாயிகளை நாவற்குழி மக்களும் குறிப்பாக தென்மராட்சிப் பகுதி மக்களும் நன்கு அறிவர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக சுமார் இரண்டு வருடகாலமாக இப் பிரதேச விவசாயிகள் தங்கள் தொழிலைச் செய்ய முடியாது படும் வேதனைகளையும், கஷ்டங்களையும் யாவரும் அறிந்தும்கூட இதுவரை எவரும் நடவடிக்கை எடுத்ததாக இல்லை.

இப் பிரதேசத்தில் காவல் அரண்கள் நிறைய இருப்பதனால் பெரும் அளவிலான ஆடு, மாடுகள் மிதி வெடிகளினால் இறந்தும், தமது கால்களை இழந்தும் வந்தமை அவ்வப்போது கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் நன்கு தெரியும். இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் மேற்கூறிய விவசாயப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் மிக மிகக் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வரும் விவசாயிகளுக்கு அரசாங்கம் எத்தகைய நஷ்ட ஈட்டினையோ அல்லது அவர்களது வறுமையைப் போக்குவதற்கு ஏற்ப நிவாரணத்தையோ இதுவரை வழங்க முன் வராதமை வேதனை தருவதாக உள்ளது.

இது விடயமாக அரசாங்க இயந்திரமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ அக்கறை கொண்டு நடவடிக்கை எதிக்காதது ஏனோ?

இது விடயமாக விவசாய சம்மேளனம் மூலமாக யாழ். அரசாங்க அதிபருக்கு முறைப்பாட்டு மகஜரும் அதன் பிரதிகள் நாவற்குழி கிராம சேவையாளருக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளருக்கும் அனுப்பப்பட்டன. எனினும் இன்றுவரை உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக இல்லை.

மேற்கண்ட இரு பகுதிகளிலும் உள்ள விவசாயக் காணிகள் முடிக்குரியவை அல்ல. விவசாயிகளின் சொந்தக் காணிகளே. விவசாயச் செய்கையில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்த வேளை ஷெல் வீச்சுக்கும், துப்பாக்கி வேட்டுக்கும் பயந்து சிறிது தூரம் சென்று கோயில்களிலும், பள்ளிக்கூடங்களிலும சில நாள்கள தஞ்சம் அடைந்து மீள வந்து தமது விவசாயக் காணிகளைப் பார்வை இட்டபோது வயிறு பற்றி எரிந்தது. நெய் திரளும் போது தாளி உடைந்தது போல இப்பகுதி இராணுவ நடவடிக்கையினால் பெரும் அலைக்கழிக்கப்பட்டதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இத்தகைய கஷ்டமான சூழ்நிலையில் வாழும் விவசாயிகளுக்கு இராணுவ நடவடிக்கைக்கு முன் அறவழிப் போராட்டக் குழுவினர் கடனடிப்படையில் விவசாயத்துக்குத் தேவையான சில உபகரணங்களை வழங்கி இருந்தார்கள். தற்சமயம் அப்பணத்தை மீளளிப்புச் செய்ய வேண்டும். அன்றேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறும் கடிதங்கள் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆனால் தொழில் பாதிப்புற்ற நிலையில் பணத்தைச் செலுத்தக் கூடியவர்களாக இப்பகுதி விவசாயிகள் இல்லை. ஆகையால் கால அவகாசத்தை நீடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இச் சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய நாடுகளில் சிலவான ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி நெதர்லாந்து ஆகிய நாடுகள ஞாபகத்துக்கு வருகின்றன. விவசாயிகளுக்கு எத்துணை மரியாதையையும், கௌரவத்தையும் அங்குள்ள அரசாங்கங்கள் அளித்து வருகின்றன என்பதை ஒரு கணம் சிந்திக்கிறேன்.

இலங்கையில் நீளக்காற் சட்டை போட்டவர்களுக்கும் நீளக்காற்சட்டை அணிந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமே செல்வாக்கும் மதிப்பும் உண்டு. இந்நிலையில் எமது நாடாளுமன்றப் பிரதிநிதி யார்? அவர் எங்கிருக்கிறார் என்பதும் தெரியாது வாழுகின்றோம். இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்து மக்களின் அபிமானப் பத்திரிகையாகிய உதயனில் இதனைத் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டது.

சம்பந்தப்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உருப்படியான நடவடிக்கை எடுத்து நாம் எமது உயிரையோ எமது கால்களையோ இழக்காத விதத்தில் விவசாயக் காணிகளில் உள்ள மிதி வெடிகள், கண்ணி வெடிகளை அகற்றி விவசாயத்தை மேற்கொள்ள வசதியும் உதவியும் செய்யுமாறு இப்பகுதிகளில் வாழும் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

நாவற்குழி; என். சத்தியசீலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சில்லறைச்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வெள்ளைக்கினிக்குஞ்சுகள், பான்டெயில் ஜிப்சன் புறாக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. வரதராசா (கடை) மட்டுவில் உபதபாற்கந்தோர் முன்பாக, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. [53584]

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் பல கடைகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் வேண்டாம். தொடர்பு: ராம், இல. 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். [53578]

## பிரத்தியேகவகுப்பு

Chemistry A/L 97, 98 Inorganic வினாவிடை வகுப்பு ஆரம்பம்: 23-2-98 திங்கள். ஆசிரியர் லே. அன்பழகன், இல. 01, ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம் (திருமறைக் கலாமன்றம் அருகில்). [53581]

Physics A/L 97, 98 புலமைகள் மீட்டல் ஆரம்பம். 25-2-98 (புதன்) ஆசிரியர் ம. ஸ்பெல்மன், 18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். [53582]

## கோஷ்டி மோதலில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 24

இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்ச்சண்டை ஆண்களுக்கிடையில் கோஷ்டி மோதலாக மாறி கத்திவெட்டில் முடிவடைந்தது.

புத்தூர் கிழக்கு வாதரவத்தைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இக்கோஷ்டி மோதலில் இருதரப்பிலும் நால்வர் கத்திவெட்டு, பொல்லடி, கொட்டன் அடிகளுக்கிலக்காகி படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கத்திவெட்டுக்கிலக்காகியும், மற்றைய குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கொட்டன், தடி அடிகளுக்கு இலக்காகியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-15)

## பாதுகாப்பு உத்தியோகத்தரின் சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், பெப் 24

பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரின் சைக்கிள் ஒன்று அவரது பாதுகாப்புப் பகுதிக்குள்ளிருந்தே திருட்டுப்போயுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் சமீபத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

(இ-15)

**A/L 97**
**DAY CLASSES**
ஆரம்பம்:-
**25.02.98**
(8 மணி)
**A/L 2000**
(கலை – வர்த்தகம்)
ஆரம்பமாகி விட்டன.

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[49964]

# மாணவர் அழைப்பு

யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் கல்வி கற்று 1990 க்குப் பின் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சகல மாணவர்களையும் எதிர் வரும் 25-02-98 புதன்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு பாடசாலையில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதிபர்
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
[53595]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 24 – 12 – 1909

மறைவு: 26 – 01 – 1998

## திருமதி ஜெயமணி சாமிநாதன்

எமது அன்பு அன்னையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர்கள், சுற்றத்தார்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு 25-2-1998 புதன்கிழமை இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"அன்னை இல்லம்"
G. P S வீதி,
கல்வியங்காடு.
(53596)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி கனகசபை நாகரத்தினம்

(கொக்குவில் மேற்கு)

மலர்வு: 19 - 01 - 1928

உதிர்வு: 25 - 01 - 1998

அன்பின் சிகரமே! அருமை அம்மா!
அன்பாலும், பண்பாலும் அரவணைத்து
வளர்த்தீர்களே.

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்ப விளக்கும் அருமை அன்னையுமான திருமதி நாகரத்தினம் கனகசபை அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எம் நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று 24-02-98 செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை வழிபாடுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க. தவைலசிங்கம்,
குமரகோட்டம்,
கோண்டாவில்.
(53586)


தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
★ போட்டோபிரதிகள்
★ லமினேட்டிங்
(கவரிடுதல்)
நாடவேண்டிய இடம்:
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளங்கலைஞர் மன்றம்

நல்லூர்

## சிவராத்திரி தினத்தை ஒட்டிய மாதாந்த இசை நிகழ்ச்சி

25 - 2 - 98 புதன் மாலை 3 மணி
மன்றக் கலாமண்டபம்

தலைவர்: சோ. பத்மநாதன்
(அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

முதன்மை விருந்தினர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(கலைப்பீட பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
கலாநிதி நா. சுப்பிரமணியன்
(தலைவர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

மாலை 3 மணி: மங்கள இசை
ஸ்வரநாத சங்கீர்த்தனி, ஈழநல்லூர்
N. ராஜேஸ்வரன் குழுவினர்

N. ராஜேஸ்வரன், V. செல்வராஜா — நாதஸ்வரம்
M. சுதா, M. ராஜேந்திரம் — தவில்

3-45
செல்வி பிரஷாந்தி ராமச்சந்திரன் — பாட்டு
திரு. A. ஜெயராமன் — வயலின்
செல்வன் R. சஷ்டிகுமரன் — மிருதங்கம்

4.30 இசைக்கச்சேரி
திரு. சி. பத்மலிங்கம் — பாட்டு
திரு. R. ராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. M. சிதம்பரநாதன் — மிருதங்கம்

கலாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மன்றத்தினர்

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

நிகழ்ச்சி ஏற்பாடு:
ஸ்ரீ அம்பாள் பலசரக்கு மாளிகை
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.
(53598)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 – 05 – 1956

உதிர்வு: 02 – 03 – 1996

## அமரர் நாகலிங்கம் இரவீந்திரராசா

(உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
முல்லைத்தீவு)

திதி: பூர்வபக்க திரயோதசி 24-02-1998

அன்புச் சகோதரா!
ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறிடுமோ உன் பிரிவின் சோகம்
ஆண்டவன் வாழும் உலகினிலே
ஆன்ம சாந்தி பெற்றிடுவீர்!

உம் பிரிவினால் துயருறும்:
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(53602)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒன்றுக்கு ஒன்பது!

வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா செல்வதற்குப் படையினர் தற்காலிகமாக தடை விதித்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்களில் மக்கள் நிரம்பி வழிகின்றனர். அந்த முகாம்களில் இடநெருக்கடி குறைந்த பின்னரே வன்னியில் இருந்து மக்கள் வவுனியாவுக்கு இடம்பெயர முடியும் என்பது படையினர் நிலைப்பாடு.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்கள்—இடம் பெயர்ந்தோர் முகாம்கள்— நலன்புரி நிலையங்கள்— நிரம்பி வழிந்தால், இடநெருக்கடி இருந்தால் அங்கு புதிதாக, மேலதிகமாக ஆள்களைத் தங்க வைப்பது பொருத்தமல்ல,

அவ்வாறு செய்யின் இப்போது அங்கு தங்கியுள்ளவர்கள் ஏற்கனவே அனுபவிக்கும் கஷ்டங்களும் துன்பங்களும் மேலும் அதிகரிக்கும். புதிதாகச் சேர்வோரும் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடும்.

இப்படி ஒரு பாதகமான நிலை தோன்றுவதற்கு அரசாங்கமே முழுக்க முழுக்கக் காரணம். அரசு இது விடயத்தில் பெரும் குற்றம் இழைக்கிறது.

இடம் பெயர்ந்தோரைத் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்லவிடாது அரசு ''சிறை பிடித்து'' முகாம்களில் வைத்திருக்கிறது இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவுவது தான் அரசின் நோக்கம் எனில், இம் முகாம்களை இடைத்தங்கல் நிலையங்களாக நடத்த வேண்டும். ஒரு சில நாள்களோ வாரங்களோ தங்க வைத்து அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல உதவி செய்திருக்க வேண்டும்

''பாதுகாப்புக் காரணம்'' என்ற முத்திரையைக் குத்தி இடம்பெயர்ந்த அப்பாவி மக்களை, அகதிகளை, கைதிகளாக்கி வைத்திருப்பது பெரும் குற்றமாகும்; மனித உரிமை மீறலுமாகும்.

அகதி முகாம்களில் மக்களைத் தடுத்து வைத்துச் ''சித்திரவதை'' செய்வதனை நிறுத்தி அவர்களை விடுவிக்க வேண்டும் என்று காலத்துக்குக் காலம் பல தரப்பினராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

நியாயம் வழங்குவதாக அரசு கடந்த பதினேழு மாதங்களாக அவ்வப்போது வாக்குறுதி அளித்தது. ஆனால் செயலளவில் எதுவும் நடைபெறவில்லை. இதனால் சுமார் பதினையாயிரம்பேரின் வாழ்க்கை சீரழிகிறது; சிதைந்து கொண்டிருக்கிறது

இது விடயத்தில் அரசு காட்டும் அசமந்தம், தான் செய்யும் குற்றத்திலிருந்து திருந்திக் கொள்ளக் காட்டும் பின்னடிப்பு என்பனவே வவுனியா அகதி முகாம்கள் நிரம்பி வழியக் காரணம்!

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வர விரும்புவோருக்குக் கூட அரசு போக்குவரத்து வசதிசெய்துகொடுக்கவில்லை— தனது இயலாமை காரணமாகக் கப்பல் சேவையையும் தொப்பென போட்டுவிட்டது அரசுக்கு — அரசியல் தலைவர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் — தமிழ் மக்கள் கஷ்டங்கள் குறித்து என்ன அக்கறை ...?!

ஒரு குற்றத்தை நியாயப்படுத்துவதற்காக ஒன்பது குற்றங்களைச் செய்யும் வகையிலேயே வன்னியிலிருந்து வவுனியா வரத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

# இரத்தக் கண்ணீர் வடிக்க வைக்கிறது

# மாவை ஆலயத்தின் அழிவுத் தோற்றம்

இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சிறப்புடையதாகும். அது குடாநாட்டின் தொன்மைவாய்ந்த ஆலயம். ஆகம விதி பிறழாமல் கிரியைகள், பூசைகள், திருவிழாக்கள் நடைபெற்ற ஆலயம். இந்தியாவில் உள்ள ஆலயம் ஒன்றுக்குச் செல்லும் பக்தி உணர்வை ஊட்டி வந்த வணக்க ஸ்தலம் அது.

வேளை தப்பாத பூசைகள், அபிஷேகங்கள் நடைபெற்று வரும் மாவிட்டபுரத்தில் குடிகொண்டிருக்கும் குமரப் பெருமான் குடாநாடு எங்கும் உள்ள அடியார்களின் நெஞ்சில் வீற்றிருக்கும் வெற்றி உடையவன்.

பக்தர்களின் வினைதீர்த்து சித்தியும் முக்தியும் தரும் மாவை முருகனின் அருட்பொலிவு காண்பது ஒரு தெய்வீக ஆனந்தம்.

ஆனால் அவனைக் கடந்த எட்டு வருடங்களாகத் தரிசிக்க முடியவில்லை. அதனால் தவித்த பக்தர்களுக்கு இப்போது ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்து அரசி ஒருத்திக்கு குதிரை முகம் மாறி அருள் புரிந்த திருத்தலமான மாவிட்டபுரம் கந்தன் கோயில்கொண்டிருக்கும் ஆலயத்தின் இன்றைய கோலம் சைவப் பெருமக்களை இரத்தக் கண்ணீர் சொரிய வைக்கிறது. ஆம். மாவை முருகனின் அருட்காட்சி கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்த கண்கள் ஆலயத்தின் பொலிவிழந்த அழகிழந்த காட்சி கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

கடந்த எட்டு ஆண்டுகளின் பின்னர் ஓரளவுக்காவது மாவைக் கந்தனை வழிபட மக்களுக்கு சந்தர்ப்பம்கிடைத்தது ஓரளவு ஆறுதலே.

மாவிட்டபுரத்தை மையமாகக் கொண்டு தெல்லிப்பழை, கொல்லன்கலட்டி, காங்கேசன்துறை, வீமன்காமம் கிராமங்கள் சுற்றாடலில் அமைந்துள்ளன.

இக்கிராமங்களில் வாழ்ந்த மக்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவுடன் மாவை முருகன் தனித்துவிட்டான்— தனிமைக்குட்பட்டுவிட்டான். வரலாற்றில் இல்லாத வடுவும் கொடுமையும் இது.

தற்போது முருகனை வழிபடக்கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி பலர் இப்போது ஆலயத்துக்குச் செல்கின்றனர். அதோடு தமது வீடுகள், சொத்துக்கள் எப்படியிருக்கின்றன. தாம் அங்கு சென்று மீள வாழ முடியுமா? என்ற ஆதங்கத்துடன் அப்பகுதி மக்கள் பலரும் செல்கின்றனர். சிலர் தமது இருப்பிடங்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்தும் சிலர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதும் திரும்புகின்றனர்.

கடந்த தைப்பூசத்தன்று மாவை முருகனை வழிபடப் பெரும் எண்ணிக்கையில் பக்தர் கூட்டம் திரண்டது. எனினும் அந்நாள்களில் போன்றதன்று.

மல்லாகத்தில் இருந்தே மக்கள் கூட்டம் கூடியது. சைக்கிள்களிலும், நடந்தும், பஸ்களிலும் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகப் பகுதியை மக்கள் சென்றடைந்தனர்.

அடையாள அட்டைகளைக் கையளித்து, அங்கு நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸில் ஏறியதும் பஸ் நகர்ந்தது முருகன் கோயிலை நோக்கி.

தெல்லிப்பழைச் சந்தி ஊடாக பிரதான வீதியில் பஸ் விரைந்து கொண்டிருந்தது. பஸ்ஸில் இருந்தவர்கள் யன்னல் வழியாக வெளியே தமது வீடு இருக்கிறதா? என்று அறியும் ஆவலுடன் யன்னல் வழியாக எட்டிப் பார்த்தனர்.

### காட்டினூடு போகும் உணர்வு

1995 ஒக்ரோபர் இடம் பெயர்வின் பின்னர் குடாநாட்டு மக்கள் வன்னிக்குப் போய் கிளிநொச்சியில் இருந்து அடர்ந்த காடுகளால் வேறு இடங்களுக்குச் சென்ற உணர்வு இந்தப் பயணத்தின் போதும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

தெல்லிப்பழையில் இருந்து செழித்துச் செழித்து மாடமாளிகையுடன் காட்சி தந்த அந்தப் பகுதியில் தெட்டம் தெட்டமாக வீடுகளின் எச்சங்களையே காண முடிந்தது. அந்த எச்சங்களையும் மூடிய அடர்ந்த மரங்கள் அசல் காடாக காட்சிதருகிறது அந்தப் பகுதி.

வீதியில் இருந்து குறுக்குப் பார்வையில் நோக்கின் 2 ஆம் 3ஆம் காணிகளில் இருந்த வீடுகளைக் காணமுடியவில்லை. அந்தளவுக்கு காடாகவிர்ந்து மண்டி விட்டது.

தெல்லிப்பழைச் சந்தியில் பகல் இரவாக சனநடமாட்டத்துடன் எப்போதும் சந்தடியுள்ள நகரமாக—பாடசாலைகள், கடைத் தொகுதிகள் கொண்டு பொலிவுடன் மிளிர்ந்த வலி. வடக்கின் பிரதான வீதிப் பகுதியில், கடைகள் கதவுகள் இன்றியும், கூரைகள் இன்றியும் தெரு நாய்களின் வாசஸ்தலமாக உறங்கிக் கிடக்கின்றன

எல்லைக் கதியால் இல்லாத நிலையில் தொடர்நீள வனாந்

### ஒரு திருத்தலம் சிதைந்து கிடக்கிறது

தரமாக காட்சி தரும் பகுதியூடாக மாவையம்பதிபோய்ச் சேர்ந்தோம்.

மாவை முருகனின் மேற்கு வாசல் கோபுரம் மட்டும் தனக்கே உரித்தான சிறப்புடன் கம்பீரத்துடன் நிற்கிறது.

அங்கு சென்ற சகலரும் மேற்கு வாசல் ஊடாகவே கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஆலயத்தின் இரண்டாம் வீதியூடாகச் சென்று ஆலயத்தின் முற்பகுதியை [illegible] மண்டிக்கிடந்த அப்பகுதி ஓரளவு வெட்டிச் சீராக்கப்பட்டு பாதை அமைக்கப்பட்டிருக்கிறது.

### மனதை உறையவைக்கும் காட்சி

ஆலயத்தின் மேற்கு வீதி தவிர்ந்த வடக்கு, கிழக்கு, தெற்கு வீதிகளுக்கு எவரும் செல்ல முடியாது.

மேற்கு கோபுர வாசலால் உள்சென்று 2 ஆம் வீதி வழியாகச் சென்று ஆலய வழிபாட்டை முடித்து தெற்கு வீதிவழியாகமீண்டும் கோபுர வாசலை அடைந்து வெளியே வரவேண்டும்.

வடக்கு வீதிப்பக்கம் செல்ல முடியாத போதிலும் கிழக்கு, தெற்கு வீதிப் பகுதிகளை ஆலயத்தில் நின்றே பார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஒற்றையடிப் பாதை மட்டும் தெரிகிறது. ஆனால் அப்பாதையைப் பொதுமக்கள் பாவிக்கமுடியாது.

தெற்கு வீதியில் நின்று ஆலய முன்றலைப் பார்க்கும் போது ஒவ்வொரு அடியாரின் மனதையும் உறைய வைக்கும் கோலங்களைப் பார்க்க நேர்கிறது.

தேர்முட்டியை சுற்றிஐந்து தேர்களின் அடிக்கட்டுமானங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. ஆறுமுகசுவாமியார் ஆரோகணிக்கும் தேர் தொடக்கம் ஏனைய யாவும் கறையானுக்கும், வெய்யில் மழைக்கும் இரையாகியுள்ள அழிவுக் காட்சியையே அங்கு காணமுடிகிறது. தேர்களை மூடிப்போடப்பட்டிருக்கும் கூரை எல்லாம் கறையானுக்கும் இரையாகி விட்டன. தற்போது தேர்களும் கறையானுக்கு இரையாகி வருவதை அவதானிக்கமுடிகிறது.

தேர்களின் பென்னம் பெரிய சில்லுகளும் கறையானுக்கு இரையாகி உள்ளதுடன் அடிமட்டங்களும் வெடித்து, சிதறிக் கிடக்கின்றன.

பஞ்சரத தேர்ப்பவனி இனி எப்போது இடம் பெறப் போகிறது என்ற கேள்வி சகலரின் நெஞ்சங்களையும் நெருடிக் கொண்டிருக்கிறது

தேர்களின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வானை நோக்கி உயர்ந்திருந்த சப்பறம் இரண்டாகப் பிளந்து நிலத்தில் வீழ்ந்து கிடந்த காட்சி மேலும் மனதில் வலித்தது. சப்பறத்தின் அடித்தளம் 3, 4 அடிஉயரத்தில் பிளந்து கிடக்கிறது.

சற்றுத் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த மஞ்சத்திற்கும் அதே நிலைதான். அழகு மெருகுடன் மிளிர்ந்த மஞ்சம் வெறும் மரத்துண்டுகளாகக் கிடக்கின்றன.

ஆலயத்துக்கு முன்பாக அமைந்திருந்த மடாலயங்கள் எல்லாம் கதவுகள் அற்ற. ஆகாயத்தை பார்க்கக் கூடிய கட்டங்களாகக் காட்சி தருகின்றன.

### மாவை குகன்

ஆலயத்துக்குள் சென்றதும் கதவுகள் இல்லாத யாரும் உள்ளே செல்லக் கூடிய வெளி மண்டபமாக வசந்த மண்டபம் காட்சி தருகிறது. அங்கு இடம்பெற்ற வான்தாக்குதலால் மண்டபம் சேதமடைந்தது தெளிதாகத் தெரிகிறது.

ஆலய உள் வீதிக்குள் நுழைந்தால், எவ்வேளை தலையில் விழுமோ என்ற அச்சத்தை உண்டாக்கும் வகையில் கூரைகள் தொங்குவதைக் காண முடிந்தது. கூரை ஓடுகள் முற்றாக சேதமடைந்துகாணப்படுகின்றன.

### மகா மண்டபம் வீழ்ந்து கிடக்கிறது

ஆலய உள் வீதியில் அமைந்துள்ள பரிவாரமூர்த்திகளின் வாசல்களும் சேதமடைந்து உள்ளன. சுவர்களில் எங்கு பார்த்தாலும் குண்டுத்துளைகள் காணப்படுகின்றன. உள் வீதியால் வந்து மகா மண்டபத்தை அடைந்த போது, அங்கும் அதே நிலைதான்.

கூரைகள் யாவும் உடைந்து வீழ்ந்ததால், பொலித்தின்னை போட்டு கூரை மூடப்பட்டுள்ளது.

சருங்கற்களால் செதுக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்தில் ஒரு பகுதி வீழ்ந்து கிடக்கிறது.

கொடித் தம்பம் நிமிர்ந்து நின்றாலும் அடியில் கறையான் குடிகொண்டு சேதமாக்கியுள்ளது

மூலஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் முருகன் இத்தனை அழிவுகளுக்கு மத்தியிலும் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அபயக்கரம் நீட்டிக் கொண்டிருக்கும் காட்சி இதுவரை பார்த்த நாசக் காட்சிகள் ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து சிறிது மீண்டு அவனைப் பார்த்து அழுதழுது ஆராதிக்கத் தூண்டியது.

ஆலயத்தில் வாகனசாலையில் வைக்கப்பட்டிருந்த பெரும்பாலான வாகனங்கள் கறையானுக்கு இரையாகி உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன.

ஆலயச் சுற்றாடலில் சேதமும் அழிவுகளையே காண நேர்ந்த போதிலும் பக்தர்கள் நீண்ட காலத்தின் பின்னர் மாவை முருகனை வழிபட்ட நிம்மதியுடன் திரும்பினர்.

எப்போது எமது பகுதியில் குடியமர்ந்து முருகனை நித்தம் தொழப் போகிறோமா என்ற ஆதங்கம் மக்கள் முகங்களில் தெரிந்தது. ★



இப்போதும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் மாவைக் கந்தன் ஆலய மேற்குக் கோபுரத்தின் அருகே, துண்டாகிக் கிடக்கும் வான் நோக்கிய வண்ணச் சப்பறம் வலம் வந்த போது முன்னர் எடுக்கப்பட்ட படம் இது.

இந்த பொலிவும் எழிலும் ததும்ப மாவை முருகன்எழுந்தருளிவரும் காட்சியை இனி எப்போது காண்போம்? முருகனே அதற்கு விடை சொல்லட்டும்.

---

**நாளை**

**மாசி 13**

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி பின் இரவு 01.53 வரை

நட்சத்திரம்: திருவோணம் நண்பகல் 12 20 வரை.

மஹாசிவராத்திரிவிரதம்

சுபநேரம்: 05.00-06.30

ராகுகாலம்: 12.30-2.00

(பகலுக்கும் இரவுக்கும் மழைய நேரப்படி)

# பூசையோ பராமரிப்போ இல்லாது வடமராட்சி கிழக்கில் கோயில்கள்

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சிகிழக்குப் பகுதியில் உள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற பல ஆலயங்கள் நீண்டகாலமாக பராமரிப்பு மற்றும் பூசைகள் இன்றி விடப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி அந்தோனியார் ஆலயம், கட்டைக்காடு கப்பல் ஏந்திமாதா ஆலயம், கூடுத்துறை ஐந்தாம் பனை பிள்ளையார் ஆலயம், ஆழியவளை வெட்டு முருகன் ஆலயம், மண்டலாய் பிள்ளையார் ஆலயம் என்பனவே கடந்த ஏழு வருடங்களாக பராமரிப்போ பூசையோ இன்றி உள்ளன.

இவ்வாலயங்கள் அமைந்துள்ள பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

இப்பகுதிக்கு மக்கள் செல்ல முடியாதவாறு மண் அணைகள் இடப்பட்டு முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளது. (இ-25)

## நுவரெலியாவில் தாக்கப்பட்ட நான்கு வாகனங்களும் தமிழருக்குச் சொந்தமானவை

நுவரெலியா, பெப். 24

நுவரெலியாவில்பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளான நான்கு வாகனங்களும் தமிழ் வர்த்தகர்களுக்குச் சொந்தமானவை என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் பின்னணியாக இருந்துள்ளார் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-2)

## கூட்டணியின் முற்போக்கான திட்டங்களுக்கு புளொட் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை நிர்வாகத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் முன்னெடுக்கின்றது முற்போக்கான திட்டங்களுக்கு தனது ஆதரவை புளொட் வழங்கும் என அந்த அமைப்பின் உபதலைவரான என். மாணிக்கதாஸன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புளொட் அமைப்பினர் யோகேஸ்வரன் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளனர். அவருக்கு மரியாதை செலுத்தும் நோக்கிலேயே நாம் கூட்டணியின் முற்போக்கான திட்டங்களுக்கு ஆதரவு வழங்கவுள்ளோம். அதேசமயம் கூட்டணியினரின் பிற்போக்கானதிட்டங்களை நாம் தொடர்ந்து எதிர்ப்போம்.

யாழ். மாநகரசபைத் தேர்தல்தொடர்பாக தொடர்ந்து எமக்கு சந்தேகமே இருந்து வருகின்றது.

தேர்தலில் கூட்டணியினருக்கு ஆதரவு இருந்தது. ஆனால் வெற்றி பெறும் அளவு ஆதரவுஇருக்கவில்லை. ஆயுதக் குழுக்களை ஆட்சிக்கு வரவிடக்கூடாது என அரசு செய்த சூழ்ச்சியினாலேயே கூட்டணியினர் வெற்றி பெற்றிருக்கலாம் என சந்தேகப்படுகின்றோம் நாம்.

ஆயுதக் குழுக்களால் சிவில் நிர்வாகத்தை நடத்த முடியாது என்றொரு கருத்து நிலவுகின்றது இதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் இராணுவம் பணிபுரியும் ஓர் இடத்தில் ஆயுதம் தாங்கியோர்களாலேயே சிவில் நிர்வாகத்தை நடத்த முடியும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாமரங்களில் நோய்

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள மாமுனை, நெல்லியான், பணிக்காட்டுப் பகுதிகளில் மாமரங்களில் ஒருவகையான நோய் காணப்படுகிறது. (இ-36)

## நூலகம் அமைப்பு

வடமராட்சி, பெப். 24

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் வசதிகருதி நூல்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. (ஐ 137)

## நீர்வேலியில் திருட்டு

உரும்பிராய், பெப். 24

நீர்வேலி வடக்கில் பருத்தித்துறை வீதியிலுள்ள ஒரு வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு தொலைக்காட்சிப் பெட்டி, டெக், ஜெனரேற்றர் ஆகியன களவாடப்பட்டுள்ளன.

இது இவற்றை வாடகைக்கு விடும் நிலையம் ஆகும்.

கோப்பாய் பொலிஸில் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ-154]

# காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்கள் அபிவிருத்தியாகும்

## அமைச்சர் அஷ்ரப் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டில் உள்ள காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக கப்பல் துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் உறுதி கூறியுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஆர். இராமேஸ்வரன் அமைச்சர் அஷ்ரப்புடன் பேச்சு நடத்திய போதே அவர் இப்படி உறுதி கூறினார்.

காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருக்கின்றன.

குடாநாட்டுக்கு பொருள்களை எடுத்துவரவும், பயணிகளை அழைத்து வரவும் கப்பல் சேவையே முற்றுமுழுதாக நம்பியிருக்க வேண்டியுள்ளது.

ஆகவே இந்த துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியம் — என்று ஆர். இராமேஸ்வரன் அமைச்சருடன் நடந்த பேச்சில் எடுத்துக் கூறினார்.

இது தொடர்பாக அமைச்சருடன் தொடர்ந்து பேச விருப்பதாக ஆர். இராமேஸ்வரன் தெரிவித்தார். (இ-3)

# கிருஷாந்தி கொலை வழக்கு எதிரி மரணத்தில் மர்மம்?

கொழும்பு, பெப். 24

கிருஷாந்தி கொலை வழக்கில் 5ஆவது எதிரியாக இருந்த சமன் விஜேயானந்த அல்விஸ் என்பவரின் மரணத்தில் மர்மம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

5ஆவது எதிரியான சமன் விஜேயானந்த அல்விஸ் கடந்த 19ஆம் திகதி கொழும்பு அரச மருத்துவ மனையில் இறந்தார்.

அவரது பிரேத பரிசோதனையை கொழும்பு பிரதி சட்ட வைத்திய அதிகாரி திருமதி ரி. பி. சூரியவாசம் நடத்தியிருந்தார்.

இந்தப் பிரேத பரிசோதனையில் தமக்குத் திருப்தியில்லை எனவும் எனவேவேறு சட்ட வைத்திய அதிகாரியால் பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டும் எனவும் இறந்தவரின் நலனைக் கவனிக்கத் தோற்றிய சட்டத்தரணி நிமல் முத்துக்குமரண மரண விசாரணையின் போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராணுவப் பொலிசைச் சேர்ந்த லெப். கேணல் குணரத்தினாவும் கோப்பிரல் மனம்பேரியும் தன்னைத் தாக்கினர் என 5ஆம் எதிரி தெரிவித்தார் எனவும் அதுபற்றி வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் மூவருக்கும் தான் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதி சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் எதிரி மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டதே மரணத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ஜி. சீ. ஈ. மாணவருக்கு இலவச வகுப்பு

கொழும்புத்துறை, பெப். 24

ஜி. சீ. ஈ. (சாதாரண) வகுப்பு மாணவர்களுக்கான இலவச வகுப்புக்கள் யாழ். லயன்ஸ் கழகத்தினரால் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டுவருகின்றன.

வாரத்தில் மூன்று நாள்கள் மாலை 3 மணி முதல் இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் சி. ஆ. [illegible] இந்த வகுப்புக்களை [illegible] செய்துள்ளார். (இ-80)

# சிவராத்திரி நிகழ்வுகள்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினம் நாளை புதன் கிழமை நான்கு ஜாமமும் விசேட பூசைகள், அபிடேக ஆராதனைகள் இடம்பெற்று, நாளை மறுதினம் அதிகாலை உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது (இ-90)

★ ★ ★

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் சட்டநாதர் கோயிலில் மகா சிவராத்திரிதினம் நாளை சிறப்பாக நான்கு சாம விசேட பூசை வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது. (இ)

★ ★ ★

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் நாளை சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மாலை 6 மணிக்கு திருவடிக்கு அபிடேகமும், அதனைத் தொடர்ந்து நற்சிந்தனை, தேவார பாராயணம். கந்தபுராண அடிமுடி தேடு படலம் புராண படலமும் நடைபெற்று மறுதினம் காலை மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது (இ-8)

★ ★ ★

கைதடி சாந்திநிலைய முதியோர் இல்லத்தில் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இல்லப் பொறுப்பதிகாரி தலைமையில் காலை இல்ல முன்றலிலுள்ள இந்து ஆலயத்தில் விசேட பூசைகளும், பிற்பகல் கலை நிகழ்ச்சிகளும், இரவு சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (இ-103)

★ ★ ★

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயிலில் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை விசேட அபிஷேகங்களும், புராண படனம், சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (இ-111)

★ ★ ★

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை புதன் கிழமை வழக்கம்பரை அம்பாள் ஆலயம், சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயம் வண்ணாகம் விசுவத்தனை முருகப்பெருமான் ஆலயம். சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் இரவு பூராவும் விசேட பூசை அபிடேக ஆராதனைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (இ-48)

★ ★ ★

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நான்கு ஜாமப் பூசைகளும், அபிஷேகமும், திருமுறை ஓதலும், பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன. (இ-8)

★ ★ ★

புலோலி மேற்கு அல்வோலைப் பிள்ளையார் கோயிலில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை விசேட பூசைகளும், சமயச் சொற்பொழிவுகள், நாடகம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (இ-15)

★ ★ ★

புலோலி பர்வதவர்த்தனி பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகளும் தெய்வீகப் பேருரைகள், கூட்டு மன்றம் முதலிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-15)

★ ★ ★

உரும்பிராய் வடக்கு திருவீதி பேச்சியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை புதன் கிழமை இரவு நான்கு ஜாமமும் அபிஷேகங்கள் இடம்பெறும்.

சு. தவராசா, ச. திவாகரன் ஆகியோர் சமயச் சொற்பொழிவு ஆற்றுவர். திருமதி நடராசா பூமணி பக்திப் பாடல்கள் பாடுவார். (இ-154)

பருத்தித்துறை சிவன்கோயிலில் மகாசிவராத்திரி விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. அன்றிரவு சாமப்பூசைகளும் இயல் இசை நிகழ்வுகளும் இடம் பெறும். (இ-173)

★ ★ ★

வல்வெட்டித்துறை சிவன் கோயிலில் சிவராத்திரி விழா நாளை புதன்கிழமை இரவு நடைபெறும்.

அன்றைய தினம் இரவு நான்கு சாமப்பூசைகள் விசேடமாக இடம்பெறும். (இ-173)

★ ★ ★

அல்வாய் சாமணந்தறை ஆலடி பிள்ளையார் ஆலய மகா சிவராத்திரிவிழா நாளை இரவு நடைபெறவிருக்கின்றது.

அல்வாய் கவிஞர் நாடக மன்றம், மனோகரா கலை நாடகமன்றம் அல்வாய் இந்து இளைஞர் மன்றம் ஆகியனவற்றின் நாடகங்களும் இடம் பெற உள்ளன. (இ-109)

★ ★ ★

25ஆவது ஆண்டு நிறைவு காணும் பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றம் காலையடி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்துடன் இணைந்து சிவராத்திரி கலைவிழா நாளை மாலை 6 மணிக்கு நடத்துகின்றது.

இவ்விழாவில் கவிதா நிகழ்வு, சிறுமியர் நடனம், மழலைகள் கீதம், நகைச்சுவை என்பவற்றுடன் சத்தியவான் சாவித்திரி, நிகழ்கால மாற்றங்கள் எனும் இரு நாடகங்களும் மேடையேறுகின்றன. (இ)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை மாலை 6 30 மணிதொடக்கம் மகாசிவராத்திரி நான்கு சாமப் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (இ-30)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் கோயிலில் மகாசிவராத்திரி நான்கு சாமப்பூசைகளும் நாளை ஆலயப் பிரதம குரு சு. சுந்தரராசக் குருக்கள் தலைமையில் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

தென்புலோலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகா சிவராத்திரி விழா நாளை புதன் கிழமை இரவு நடைபெறவிருக்கின்றது. (இ-109)

★ ★ ★

பருத்தித்துறை சிவன் கோயிலில் மகா சிவராத்திரி விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. அன்றிரவுசாம பூஜைகளும் இயல், இசை நிகழ்வுகளும் இடம் பெறும். (இ-178)

★ ★ ★

வல்வெட்டித்துறை சிவன் கோயிலில் சிவராத்திரி விழா நாளை புதன்கிழமை இரவு நடைபெறும்.

அன்றைய தினம் இரவு நான்கு சாமப் பூசைகள் விசேடமாக இடம்பெறும். (இ-173)

## கோரிக்கை

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தும்படி மேற்படி பாடசாலையின் பெற்றோர்கள் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)

## ஒத்திவைப்பு

எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் நல்லொழுக்க சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்நீதிமன்ற உத்தரவை அடுத்து கல்யாண்சிங் அரசு பதவியேற்றது!

## உண்ணாவிரதப் போரைக் கைவிட்டார் வாஜ்பேய்!

புதுடில்லி, பெப் 24

இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசை பதவியில் இருந்து நீக்கிய ஆளுநரின் செயல் சட்டவிரோதமானது என்று அலகதாபாத் உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

முதல்வர் கல்யாண் சிங் அரசை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அடுத்து முதல்வர் கல்யாண்சிங் நேற்று தமது கடமைகளை ஆரம்பித்தார்.

பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசை திடீரென பதவியில் இருந்து விலக்கிய ஆளுநர் றொமேஸ் பண்டாரியின் செயலைக் கண்டித்து அவரைப் பதவி நீக்கம் செய்யுமாறு கோரி கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பித்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தலைவர் அடல் பிஹாரி வாஜ்பேய் நேற்று மாலை கைவிட்டார்.

வாஜ்பேய் நேற்று மாலை தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட போது முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் அவருடன் இருந்தார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பாரதிய ஜனதாக் கட்சிக்கு வழங்கிவந்த ஆதரவை லோகதந்திர காங்கிரஸ், ஜனதாதள் ராஜாராம் பாண்டே பிரிவு ஆகிய இரு கட்சிகளும் கடந்த சனிக்கிழமை திடீரென வாபஸ் வாங்கியதை அடுத்து முதல்வர் கல்யாண்சிங் அரசு பெரும்பான்மையை இழந்தது. இதனையடுத்து மாநில ஆளுநர் றொமேஸ் பண்டாரி அன்றிரவே கல்யாண்சிங் அரசை பதவியில் இருந்து நீக்கிவிட்டு லோகதந்திர காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகதாம்பிகா பாலின் தலைமையில் புதிய அரசை நியமித்தார்.

ஆளுநரின் அந்த திடீர் நடவடிக்கையால் அதிருப்தியுற்ற பாரதிய ஜனதாக் கட்சி அலகதாபாத் நீதிமன்றில் ஆளுநரின் முடிவுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்தது.

அந்த மனுவை விசாரித்த பின்பு நீதிமன்றம் நேற்றுத் தனது தீர்ப்பை வழங்கியது.

கல்யாண்சிங் அரசை மீண்டும் பதவியில் அமர்த்துமாறும், தமது பெரும்பான்மையை அவர் சட்டப்பேரவையில் நிரூபிப்பதற்கு சால அவகாசம் ஒன்றை வழங்குமாறும் தமது அரசின் பெரும்பான்மையை அவர் நிரூபிக்கத் தவறினால் ஆளுநர் பின்னர் பொருத்தமான நடவடிக்கையை எடுக்கலாம் என்று நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### பதுளையில் இருந்து புறப்பட்ட

## புலிகளின் அம்புலன்ஸ் கைப்பற்றப்பட்டதாம்!

கொழும்பு, பெப் 24

பதுளையிலிருந்து நோயாளிகளுடன் புறப்பட இருந்ததாகக் கூறப்படும் புலிகள் இயக்கத்துக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் அம்புலன்ஸ்வண்டி பண்டாரவளையில் பழுது பார்க்கப்படும்போது பண்டாரவளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வானின் சொந்தக்காரர் கடந்த வாரம் கதிர்காமத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் எனவும் அவர் அளித்த தகவலின் அடிப்படையில் இந்த வான் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளிகளைக் கொண்டு செல்வது என்ற போர்வையில் வெடிப் பொருள்களைக் பதுளையில் வைத்து நிரப்பி கதிர்காமம் அனுப்பத் திட்டமிடப்பட்டதாக வெளிவந்த தகவலையடுத்து இந்த வான் பற்றிய தகவலை பொலிஸ் தலைமையகம் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் தெரிவித்திருந்தது.

இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து அந்த வானைத் திருத்துவதற்காக கராஜ் ஒன்றில் ஒப்படைத்து விட்டு அதன் உரிமையாளர் கதிர்காமத்துக்குத் தப்பிச் சென்றார் எனவும் அங்கு வைத்து கதிர்காமம் பொலீஸாரால் அவர் கைது செய்யப்பட்டார் எனவும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)


# நாடக நிகழ்வு

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப்
**பிள்ளையார் கோவில்**
திருப்பணி நிதிக்காக
யாழ். நாடக அரங்கக் கல்லூரியும்
அரங்க செயற்பாட்டுக் குழுவும்
வழங்கும்

## இடுக்கண் வருங்கால்...

(சிறுவருக்கான நாடகம்)
ஆக்கம்; நெறியாள்கை
குழந்தை ம. சண்முகலிங்கம்
இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்: 25-02-98 (புதன்கிழமை)
நேரம்: காலை 10.00 மணி
மாலை 2.00 மணி
பிரவேசம்: சிறுவர் 10/-
பெரியோர் 20/-
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(53611) — ஒழுங்கமைப்பாளர்



# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கப் பணியாளர்
**திரு. பற்றிக் லோறன்ஸ்**
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி ஆன்கிறேஸ் யூப்பிறேசியா புஷ்பம் லோறன்ஸ்**

அவர்களது இழப்பினால் பரிதவித்து நிற்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொது முகாமையாளர்,
தலைவர், நெறியாளர் குழு,
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்.
கூ. ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ். பட்டணக் கிளை.
(53617)


## மெய் வல்லுநர் போட்டிகள்

சண்டிலிப்பாய், பெப். 24

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் நா. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் தி. சுதந்திரபாலன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சு. வைரவநாதன் கலந்து கொள்வார். (ஐ-135)

★ ★ ★

கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வித்தியாலய மைதானத்தில் அதிபர் பி. வெனடிக்ற் தலைமையில் நடைபெறும். (ஐ-51)

★ ★ ★

யாழ். புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் நடைபெற உள்ளது. (ஐ-51)

★ ★ ★

யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்யாலய அதிபர் அருட்சகோதரி மேரி வில்பிறெட் தலைமையில் யாழ். புனித மரியாள் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

திருநெல்வேலி பங்குத்தந்தை அருட்திரு பிரான்சிஸ் டானியல் அடிகளார் பிரதம விருந்தினராகவும் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நா. க. சண்முகநாத [illegible] சிறப்பு விருந்தினராகவும் [illegible]. (ஐ-51)

### புதிய கட்டடம் திறப்பு

குருநகர், பெப். 24

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் புதிய கட்டடம் ஒன்று நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. ஐம்பதாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி பெ. ஜெ. செல்வராணி திறந்து வைத்தார்.

## கீரிமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மணியளவில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது. இலங்கை இராணுவத்தின் 515 ஆவது பிரிகேட்டின் தளபதி பிரிகேடியர் விஜயவிக்கிரம மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள், நகுலேஸ்வரர் ஆலய பிரதமகுருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரதமகுரு மகாராஜ ஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், நகுலேஸ்வரர் ஆலய புனரமைப்புச்சபை செயலாளர் . பரமநாதன், யாழ். இந்து சமயப்பேரவையின் உபதலைவர் ஆ. மகாலிங்கம், வலி வடக்கு பிரதேச செயலாளர் திருமதி ப. இலகநாயகம், வலி. வடக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் நா. வேதநாயகன், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் எஸ். சிவமகாராஜா ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாளை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் தொடர்பாகவும், அதில் கலந்துகொள்ளும் பக்தர்களின் வசதிகள், மறு நாள் புனித தீர்த்தமாடச் செல்லும் அடியார்களின் போக்குவரத்து ஏற்பாடுகள் பற்றியும் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

★ நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை பக்தர்கள் தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து கீரிமலைக்கு விசேட பஸ்களில் அழைத்துச் செல்லப்படுவர்.

★ பக்தர்கள் தமது சொந்த வாகனங்களிலும் செல்லலாம் அவ்வாறு செல்ல விரும்புவோர் தமது வாகன இலக்கம், அதில் பயணம் செய்வோரின் பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களுடன் தமது விண்ணப்பங்களை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

★ சிவராத்திரி தினத்தன்று இரவு பக்தர்கள் கீரிமலையில் தங்கி நின்று பூசை வழிபாடுகளில் பங்குபற்ற வசதியாக மின்சாரம், குடிதண்ணீர், உணவு வசதிகள் செய்யப்படும்.

★ ஆலயத்தில் இரவு முழுவதும் சமய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

★ மறுநாள் (வியாழக்கிழமை) பக்தர்கள் அங்கிருந்து சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கும், அன்று காலை கீரிமலையில் நீராடச் செல்பவர்களுக்கும் தெல்லிப்பழையில் இருந்து போக்குவரத்து வசதிகள் செய்யப்படும்.

பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி யாத்திரையை மேற்கொள்ள சகல வசதிகளும், ஒத்துழைப்பும் வழங்கப்படும் என பிரிகேடியர் விஜயவிக்கிரம உறுதியளித்துள்ளார்.

நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரிக்கு மறுநாள் வியாழக்கிழமை மகேஸ்வர பூஜை இடம் பெறும்.

பக்தர்களுக்கான வசதிகளைச் செய்வதில் கீரிமலைப் பகுதி கிராமசேவையாளர் எஸ். சிவலிங்கம் இணைப்பாளராகச் செயற்படுவார்.

இதேவேளை —

கீரிமலையில் கடந்த 8 ஆண்டுகளின் பின்னர் நடைபெறும் சிவராத்திரி யாத்திரை தொடர்பாக பலாலியில் உள்ள வடபகுதி பாதுகாப்பு தலைமையகம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை சிவராத்திரி பூஜைகளை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதற்குப் பல வழிகளிலும் உதவிகளை வழங்க பாதுகாப்புப் படையினர் முன்வந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் மாலை 5 மணிமுதல் மறுநாள் 26 ஆம் திகதி பகல் வரை விசேட வழிபாடுகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வழிபாட்டில் சகல பக்தர்களையும் கலந்துகொள்ளுமாறு ஆலயத்தின் ஆதீனகர்த்தா கேட்டுள்ளார். வெளியிடங்களில் இருந்து வரும் பக்தர்களின் நலன் கருதி இலவச பஸ் சேவையை நடத்த படையினர் தீர்மானித்துள்ளனர்— என்றும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## தெற்கில்...

(2 ஆம் பக்கத் தொடர்)

எடுத்துச் செல்லப்பட்ட சம்பளப்பணம் வழியில் ஆயுதம் தாங்கிய கொள்ளையர் மூவரால் அபகரிக்கப்பட்டுள்ளது.

8 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் காசாளரும், சிற்றூழியரும், சாரதியும் பணம் கொண்டு செல்லப்பட்ட வாகனத்தில் இருந்துள்ளனர்.

ஆயுதம் தரித்தோர் இம் மூவரையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி வாகனத்தை மாகந்தானை என்னும் இடத்துக்குக் கொண்டு சென்று அவர்களையும் வாகனத்தையும் விட்டு விட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பிச் சென்றுவிட்டனர். (ஐ-9)


# கண்ணீர் அஞ்சலி

வடமாகாண கடற்றொழில் அமைச்சின்
உதவிப் பணிப்பாளர்
**திரு. ச. ஸ்ரீஸ்கந்தராஜா**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி தங்கம்மா சதாசிவம்பிள்ளை**
[சிவசம்பு]

அவர்கள் 18-02-1998 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், இயக்குநர் சபை
உறுப்பினர்களும் ஊழியர்களும்
வடமாகாண கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசம்.
இல: 100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/2956)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரும் மீட்கப்பட்டு பலாலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்படாத சுமார் ஐம்பது பேர் நீரில் மூழ்கியிருக்கலாம் அல்லது காணாமற் போயிருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டது.

கப்பல் தகர்ப்பால் கடல் நீரில் வீழ்ந்த மூன்று படையினர் நீந்திக் கரைசேர்ந்ததாகவும்—

மந்திகை ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை இவர்களுக்கு ஆரம்ப சிகிச்சை வழங்கப்பட்டதாகவும்—

பின்னர் மூவரும் பலாலி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்— தெரியவந்தது.

தகர்க்கப்பட்ட இரண்டு கப்பல்களிலும் இருந்த படையினர் பெரும்பாலும் தமது விடுமுறையை முடித்துக் கொண்டு கடமைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தகர்க்கப்பட்ட கப்பலில் பெரும் தொகையான ஆயுதங்களும் இருந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

(உ-ஐ-3-9-109-173)


எமது புதிய வெளியீடு!

முரளி - சுபலட்சுமி நடித்த

தினந்தோறும்

(ஒறிஜினல் வீடியோ CD) வீடியோ CDயிலிருந்து நேரடியாகப் பதிவு செய்து தருகின்றோம்.

பார்த்திபன், தேவயானி நடித்த

சொர்ணமுகி

ஒறிஜினல் வெளியீடுகள்!

★ ஒரு தலை ராகம்
★ தீர்ப்பு
★ விக்ரம்
★ ஒரு தாயின் சபதம்
★ சாந்தி

வீடியோ CD வெளியீடு!

★ கிழக்கு வாசல்

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/2955)


# மட்டுநகர் சிறையில் 19 பேர் அம்மை நோயால் அவதி

கொழும்பு, பெப். 24

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள 20 கைதிகளில் 19 பேர் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஜனவரி முதலாம் திகதி முதல் இச் சிறையில் 20 பேர் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வர் பாடசாலை மாணவர்கள் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

அம்மை நோய் கண்டுள்ள 19 பேரும் சிகிச்சை இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்தியொன்று தெரிவித்தது. (ஐ-3)

## பாலர் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 24

புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டப பாலர் பாடசாலைத் திறப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யுனிசெவ் திட்டமிடல் உத்தியோகத்தர் திருமதி பெனி புறூன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வ. கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-15)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தது எப்படி என்பது குறித்து கடற்படை உயர்மட்டத்தில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கரும்புலிகளின் பல அணிகள் நன்கு திட்டமிட்டு தயாரான நிலையில் வந்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளன. முன் கூட்டியே தகவல் தெரிய வந்ததால்தான் அவர்களால் இதைச்செய்ய முடிந்தது என படை வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளது.

கடற் கரும்புலிகளின் 10 படகுகள் வரை தாக்குதலில் பங்குபற்றியதாக ஒரு செய்தி தெரிவித்தது. (ஐ-3-9-21)

## 11 கடற்....

(முதலாம் பக்கத் தொடர்)

★ மேஜர் வள்ளுவன் (செல்வராசா தவராசா — யாழ்ப்பாணம்).

★ கப்டன் மொறிஸ் அல்லது தமிழின்பன் (தர்மபாலசிங்கம் தயாபரன் — காரைநகர்).

★ மேஜர் தமிழ்நங்கை அல்லது நைட்டிங்கேர்ள் (துரைராசா சத்தியவாணி — பூநகரி).

★ கப்டன் ஜனார்த்தனி (கைலாயநாதன் சுகந்தி — முள்ளியவளை).

★ லெப்டினன்ட் மேகலா (தங்கராசா தமயந்தி — யாழ்ப்பாணம்).

★ கப்டன் நங்கை (பட்டுராசா கௌசலா—கொட்டடி யாழ்ப்பாணம்).

★ கப்டன் வனிதா (கந்தையா புஸ்பராணி—நெடுங்கேணி). (ஐ-164)

## இரு கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

நோக்கிப் புறப்பட்டன. அவற்றுக்குப் பாதுகாப்பாக இரண்டு பீரங்கிக் கப்பல்களும், இரண்டு அதிவேக டோரா படகுகளும் சென்றன.

கரையில் இருந்து 25 கடல் மைல் தொலைவில் அந்தக் கப்பல் தொடரணி புறப்பட்டது. முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்து மேலும் இரு டோறாக்கள் அத்தொடரணியுடன் இணைந்து கொண்டன.

இக் கப்பல் தொடரணி பருத்தித்துறைக் கடற்பரப்பில் கரையில் இருந்து 10 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்தபோது சரியாக மாலை 7.15 மணியளவில் கடற் கரும்புலிகளின் அணிகள் அதன் மீது தாக்குதல் நடத்தியதும் பெரும் கடற்சமர் வெடித்தது.

இரவு 8 மணியளவில் வெடிமருந்து ஏற்றிய கரும்புலிப் படகு ஒன்று வலம்புரி கப்பலுடன் மோதியது. அக் கப்பல் தீப்பிடித்து கடலில் மூழ்கியது. இத்துணிகரத் தாக்குதலை நடத்திய இரு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறையை நோக்கி விரைந்து சென்ற கடற்படை அணியைத் துரத்திச் சென்று கடற்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து 'பவ்வத்த' என்ற தரையிறக்கும் கப்பல் மீது வெடிமருந்து ஏற்றிய இரு கடற்புலிப் படகுகள் மோதி அதனைத் தகர்த்தன. அக்கப்பல் தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கியது. இத் தாக்குதலில் எட்டுக் கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

சண்டை தொடர்ந்து நடந்தவேளை அதிவேக டோறா படகு மீது கரும்புலிப் படகு ஒன்று மோத எத்தனித்தபோது டோறாவின் தாக்குதலுக்கு இலக்காகி கரும்புலி கப்டன் மொறிஸ் என்பவர் படுகாயமடைந்து கடற்களத்தில் வீரச்சாவடைந்தார். அவருடன் சென்ற கடற் கரும்புலிப் போராளி ஒருவர் மீட்கப்பட்டார்.

இதேசமயம் திருமலையில் இருந்து மேலும் நான்கு அதிவேக டோறாப் படகுகள் பருத்தித்துறைக் கடற் பகுதிக்கு விரைந்துவந்து சண்டையில் ஈடுபட்டன.

சுமார் 8 மணி நேர கடற் சமரின் பின்னர் அதிகாலை 2 மணியளவில் கடற்புலிகளின் படகு அணிகள் தளத்துக்குத் திரும்பின.

— இவ்வாறு புலிகளின் குரல் தெரிவித்தது.

தாக்கி மூழ்கடிக்கப்பட்ட 'பவ்வத்த' என்னும் தரையிறக்கும் கப்பலிலேயே ரீ - 89 ரக டாங்கிகள் இரண்டும் எடுத்துச் செல்லப்பட்டன.

சுதந்திரப் பொன் விழாக் கொண்டாட்ட வைபவத்தின் போது பயன்படுத்துவதற்காக இவ்விரு டாங்கிகளும் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. பின்னர் அங்கிருந்து அவை இக் கப்பலில் [illegible] பட்டதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

### பந்து பட்டுக் காயமடைந்த

# கிரிக்கெட் வீரர் மரணமானார்!

கொழும்பு, பெப். 24

டாக்காவில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சமயம் தலையில் பந்து பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்திய கிரிக்கெட் வீரர் ராமன் லம்பா (வயது 38) மரணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்திய அணியின் சார்பில் நான்கு டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டிருந்த இவர் டாக்காவில் ஒரு கழக அணிக்காக கடந்த வெள்ளிக்கிழமை விளையாடிக் கொண்டிருக்கையிலேயே தலையில் பந்து பட்டு படுகாயமடைந்தார்.

இதனால் 'கோமா' நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் பின்னர் உயிரிழந்தார். (உ-9)

## ரத்வத்த அம்பாறை விஜயம்

மட்டக்களப்பு, பெப். 24

பாதுகாப்புத்துறை பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று அம்பாறைக்கு விஜயம் செய்தார்.

மூடப்பட்டுள்ள கண்டி—மகாஓயா வீதியை பார்வையிட்ட அவர் பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் ஆராய்ந்தார்.

இக்கினியாகலை மின்பிறப்பாக்கி நிலையத்திற்கும் அமைச்சர் விஜயம் செய்தார். (உ-21)

## கோழிக்குஞ்சு விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம், பெப். 24

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஒருநாள் கோழிக்குஞ்சு விநியோகம் தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறமாட்டாது என்று கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## பருத்தித்..

(முதலாம் பக்கத் தொடர்)

துறைக் கரையோரப் பகுதிகளை அதிர வைத்தது.

இரவு வேளை திடீரென வெடி ஓசைகளையும் வேட்டொலிகளையும் கேட்டு மக்கள் பீதியடைந்தனர்.

வீடுகளின் ஜன்னல்கள், கதவுகள் அதிர்ந்தன.

தாக்குதல் ஆரம்பமானதும் வடமராட்சி கரையோரப் பகுதிகளில் உள்ள படை முகாம்களில் இருந்து வெளிச்சக் குண்டுகள் கடலை நோக்கி ஏவப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

கடலில் தீப்பிளம்புகள் தெரிவதை கரையோரப்பகுதி மக்கள் அவதானித்தனர். (ஐ-9-15-173-109)

## திருகோண..

(முதலாம் பக்கத் தொடர்)

அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகள் நகர் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன. துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

உயிரிழந்த மாணவன் சிவப்பிரகாசம் அலெஸ்லியின் (மதனின்) சடலம் திருகோணமலை மூன்றாம் கட்டையில் உள்ள அவரது வீட்டிலிருந்து நேற்று நண்பகல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கத்தோலிக்க தேவாலயத்திலும் பின்னர் மாணவனின் பாடசாலையான திருகோணமலை புனித பிரான்ஸிஸ் சவேரியார் மகா வித்தியாலயத்திலும் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் திருமலை மின்சார நிலைய வீதியில் உள்ள கத்தோலிக்க மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த இறுதி ஊர்வலத்தில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். (உ-9-21)

## எல்பிட்டியவில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, பெப் 24

எல்பிட்டியப் பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் வர்த்தக நிலையம் ஒன்று சேதமடைந்துள்ளது.

ஓர் இலட்சம் ரூபா வரை சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதாக உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கீர்த்திசெல்வ தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சொந்தப்பகையே இச் சம்பவத்துக்குக் காரணம் என நம்பப்படுகின்றது. (ஐ-9)

## சில...

(முதலாம் பக்கத் தொடர்)

குறிப்புக் குறித்தும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும், யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவில்லையா என்பதையும் அறிவதற்காக பலாலி இராணுவத்தலைமையகத்தில் தகுதி வாய்ந்த அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள நேற்றிரவு பலதடவைகள் முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால் அது பலனளிக்கவில்லை. இன்று அவை குறித்து தெளிவான தகவல்களைப் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளைய உதயனில் அது பற்றிய விவரம் பிரசுரமாகும். (உ)

## 400 படையி...

(முதலாம் பக்கத் தொடர்)

வேகமாகச் செல்லக்கூடியது என்பதால் அது முந்திக் கொண்டு பாதுகாப்பாக வந்து சேர்ந்து விட்டது என்றும்.

'சக்திய வஹாவ' கப்பல் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தால் அது படைகளுக்கு தற்போதைய இழப்பைவிட கூடிய இழப்பைத் தந்திருக்கும் என்றும்—

சில செய்தி வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (உ-ஐ-9)

## 'பவ்வத்த'..

(முதலாம் பக்கத் தொடர்)

வெடித்துத் தீப்பிடித்த இக் கப்பல்கள் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் மூழ்கிவிட்டதாகவும் —

மூழ்கித் தரைதட்டிய இக் கப்பல்களில் ஒன்றின் உயர்ந்த பகுதி ஒன்று பருத்தித்துறைக் கடற்கரைப் பகுதியில் இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரிவதாகவும் —

அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை கடற் பிரதேசத்தில் சமர் நடந்த சமயம் பருத்தித்துறைக் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் ஹெலி ஒன்று பறந்து வட்டமிட்டபடி இருந்தது.

நள்ளிரவு வேளை கடற் சமர் நடந்த பிரதேசத்தில் அடிக்கடி ஏவிவிடப்பட்ட பரா லைட்டுகளினால் கடற் பகுதியில் அவ்வப்போது பிரகாசம் நிலவியது.

[உ-ஐ-3-9-15-109-173]


வாழ்த்துக்கள்!

கடந்த ஆண்டு நடைபெற்ற A/L 97 பரீட்சையில் 4 பாடங்களிலும் அதி விசேட சித்தியைப் (4A) பெற்ற எமது நிறுவன மாணவர்களான

★ T. சுரேஸ்குமார் ★ K. திவாகர்
★ S. தயாளன் ★ R. துர்க்கா
★ V. ஆரணி

ஆகியோருக்கும், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் எமது மாணவர் மன்றத்தின் சார்பில் மனமகிழ்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர் மன்றம்

IIS

(சி/2957)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org